பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 28 | வெள்ளிக்கிழமை 14.12.2018 | கதிர் 39

### இது ரகசியம் அல்ல!

அரசமைப்பை மீறிச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுக்காக ஜனாதிபதிக்கு எதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்று நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட முடியும் என்கிறது அரசமைப்பு.

அப்படி ஒன்று கொண்டுவரப்பட்டு அதனை சபாநாயகர் விசாரணைக்கு ஏற்றுக் பக்கம் 02

# பதவி போனாலும் பரவாயில்லை ரணிலைப் பிரதமராக்கமாட்டேன்!

## உடும்புப் பிடியில் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, டிசெ. 14

ரணில் விக்கிரமசிங்கவை ஒருபோதும் பிரதமராக நியமிக்கமாட்டேன். என்ன நடந்தாலும் பரவாயில்லை. முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துள்ளார். பக்கம் 11

## ஐ.தே.க. எம்.பிக்கள் கூடி வெற்றிக் கொண்டாட்டம்

### ஏமாற்றத்துடன் திரும்பியது மஹிந்த அணி

கொழும்பு, டிசெ. 14

உயர்நீதிமன்றத்துக்கு நேற்று வருகை தந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள், தீர்ப்பு பக்கம் 11

## ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை

### கொண்டு வருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, டிசெ. 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்பு மீறல்களை புரிந்துள்ளார் என உயர்நீதிமன்றம் பக்கம் 11

# நாடாளுமன்றக் கலைப்பு அரசமைப்புக்கு முரண்!

## ஜனாதிபதி மைத்திரியின் நடவடிக்கைக்கு உயர்நீதிமன்றம் ஏகமனதாகச் சாட்டை




கொழும்பு, டிசெம்பர் 14

நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பு அரசமைப்புக்கு முரணானது என உயர்நீதிமன்றம் நேற்று மாலை வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பொன்றை அறிவித்தது. பக்கம் 11

## குழப்பங்களுக்கு மத்தியில் வந்தார் அமெ. உயரதிகாரி

### வல்லுநர்களைச் சந்தித்துப் பேச்சு



கொழும்பு, டிசெ. 14

இலங்கையில் அரசியல் குழப்பங்கள் தீவிரமடைந்துள்ள சூழ்நிலையில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் நேற்று பக்கம் 11

## வைத்தியசாலையில் இருந்தவாறு தீர்ப்பை வரவேற்கிறார் சம்பந்தன்

### ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும் எனவும் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 14

உடல்நலக் குறைவால் நேற்றுக் காலை கொழும்பிலுள்ள 'லங்கா' (அப்பலோ) தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரு பக்கம் 11

## ஜனநாயகத்துக்குக் கிடைத்த பெருவெற்றி ஜனாதிபதி இனியாவது திருந்தவேண்டும்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பானது ஜனநாயகத்துக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றி. இதன் மூலம் நீதிமன்றம் சுயாதீன பக்கம் 11

## கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு ஒருபோதுமே நாம் அடிபணியோம்!

### மஹிந்த தரப்பு திட்டவட்ட அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

ஆட்சி அதிகாரத்துக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அடிபணிய நாம் தயாரில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட் பக்கம் 02

## ரணிலுடன் ஒப்பந்தம் என்று வெளியான ஆவணம் பொய்

### அப்படி எதுவும் செய்யவில்லை என்கிறார் இரா. சம்பந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 14

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் ஒப்பந்தம் செய்துள்ளேன் எனக் கூறி வெளியாகியுள்ள ஆவணம் பொய்யானது. நான் பக்கம் 11

## பொதுத் தேர்தல் இன்றேல் மக்களுக்கு நீதி கிடையாது


### தீர்ப்பை அடுத்து நாமல் கருத்து

கொழும்பு, டிசெ. 14

உயர் நீதிமன்றத்தின் முடிவை நாங்கள் மதிக்கின்றோம். அதன் விளக்கம் பற்றி நாங்கள் பக்கம் 11

## உயர்நீதிமன்றத் தீர்ப்பை மைத்திரி ஏற்கவேண்டும்

### ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை



கொழும்பு, டிசெ. 14

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பக்கம் 11

## அரசிலிருந்து விலகத் தயார்

### மஹிந்த அணி கூறுகிறது

கொழும்பு, டிசெ. 14

அரசில் இருந்து விலகத்தாங்கள் தயாராக இருப்பதாக மஹிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் பக்கம் 02

## சட்டம் தன் கடமையை சரியாகவே செய்துள்ளது

### ரிஷாத் பதியுதீன் பாராட்டு

கொழும்பு, டிசெ. 14

நாட்டில் எந்தவொரு பிரஜையும், அரசமைப்பை மீறமுடியாது என்பதை இன்றைய வரலாற்று பக்கம் 11

## ரணிலை ஆட்சியில் அமர்த்துவதில் குறியாக இருக்கிறது கூட்டமைப்பு



### சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 14

தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு, ஐக்கிய தேசிய கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சி ஆகிய இரண்டு கட்சிகள் இணைந்த தேசிய அரசின் தீர்வைப் பெற்றுத் தரு பக்கம் 02

## தீர்ப்புக்கு செவிசாய்த்து ரணிலை பிரதமராக நியமிப்பார் மைத்திரி

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

உயர் நீதிமன்றத் தீர்ப்புக்குத் தலைசாய்த்து, ஜனாதிபதி தனது நிலைப்பாட்டை மாற்றிக் பக்கம் 02

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை சட்ட ரீதியானது என நீதிமன்றம் தீர்ப்பளித்தால், ஜனாதிபதி கூறியபடி தேர்தல் நடைபெறும்.

மாறாக ஜனாதிபதியின் செயற்பாடு சட்டவிரோதமானது எனத் தீர்ப்பு வெளியாகுமாயின், அதன் பின்னரும் ஆளும் தரப்பில் தொடர்ந்து நீடிக்கும் எதிர்பார்ப்பு எமக்கில்லை. எவ்வாறாயினும், நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பையும் ஏற்பதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்து ஆட்சி அமைப்பதற்கு நாம் தயாரில்லை – என்றார். (ஐ)

# ஸ்கந்தாவில் இன்று திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 14

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர் லயன் மகாதேவா – பூமாதேவி ஞாபகார்த்த மண்டபம் திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் ஸ்கந்த வரோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் லயன் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகன், லண்டன் ஆலய குரு சிவப்பிரம்மஸ்ரீ ராம் கெங்காதரக் குருக்கள் ஆகியோர் வழங்குவர்.

இந்நிகழ்வுக்குப் பிரதமவிருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஸ்தாபகர் குடும்ப உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன் தேவாபீற்றரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் லயன்ஸ் கழக மாவட்ட பிரதி பொருளாளருமாகிய லயன் சி.ஹரிகரனும் கலந்துகொள்வர்.

சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து விருந்தினர்களை மங்களவாத்தியம் சகிதம் அழைத்துவந்து இறை வணக்கத்தைத் தொடர்ந்து கல்லூரிக் கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

சுமார் ஒரு கோடி ரூபாவரையில் செலவிட்டு மகாதேவாவின் பிள்ளைகளால் அமைக்கப்பட்ட லயன் மகாதேவா – பூமாதேவி ஞாபகார்த்த மண்டபத்தை அவரது புதல்வர்களான செ.ம.பிருந்தாபன், லயன் செ.ம.பிரிதிவிராஜா ஆகியோர் திறந்துவைப்பர்.

மண்டபத் திறப்புவிழாவை முன்னிட்டு பல்வேறு ஆக்கங்களைக்கொண்ட ஆய்வுக்கட்டுரை நூல் ஒன்றும் வெளியிடப்படும். நூல் வெளியீட்டுரையை நூலாசிரியர் சைவப் புலவர் கந்த.சத்தியதாசன் வழங்க, நூலை நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் வெளியிட்டு அதிபரிடம் கையளிப்பார்.

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டால் அது குறித்து விசாரிக்குமாறு உயர்நீதிமன்றத்தைக் கோரலாம் என்றும் அரசமைப்பு சொல்கின்றது.

ஆனால், உயர்நீதிமன்றின் நேற்றைய தீர்ப்பின்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்பைமீறிச்செயற்பட்டுள்ளார் என்பது உயர்நீதிமன்றத்தின் முழு ஆயத்தினாலேயே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது.

இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணை ஒன்றைக் கையளிக்க ஜே.வி.பி. தயாராகின்றது எனத் தெரிகின்றது.

இன்றைய நிலையில் அந்தப் பிரேரணைக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் அரைவாசிக்கும் குறையாதோரின் ஆதரவை ஜே.வி.பியால் திரட்டமுடியுமா என்பது கேள்விக்குறியே.

ஜனாதிபதக்கு எதிரான இத்தகைய முயற்சி எதற்கும் ஆதரவு தரமாட்டோம் என்று ஏற்கனவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமே நேரில் கூட்டமைப்பு உறுதியளித்திருக்கின்றது. தமிழ்க் கூட்டமைப்பின் 14 எம்.பிக்களின் ஆதரவின்றி நாடாளுமன்றில் அரைவாசி எம்.பிக்களின் ஆதரவை ஜே.வி.பி. திரட்டுவது அசாத்தியமே.

குறைந்த பட்சம் அரைவாசிக்கும் குறையாத எம்.பிக்களின் ஆதரவுடன் அத்தகைய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டாலேயே சபாநாயகர் அதனை பரிசீலனைக்குக் கூட ஏற்கமுடியும்.

ஆகவே இன்றைய நிலையில் ஜனாதிபதிக்கு எதிராக ஜே.பி.வி. முன்னெடுக்கும் குற்ற விசாரணைப் பிரேரணை சாத்தியமாவதற்க வாய்ப்புகள் வெகு வெகு குறைவு.

★ ★ ★

நேற்று உயர்நீதிமன்றத் தீர்ப்புத் தங்களுக்கு எதிராகத் திரும்பினாலும் இன்று உயர்நீதிமன்றுக்கு வரும் விடயத்தில் தங்களுக்கு சாதகமாக நிலைமை மாறாதா என்று மைத்திரி – மஹிந்த தரப்பு நப்பாசை கொண்டிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவும் மற்றும் அமைச்சர்களாக அவரின் பரிவாரங்களும் செயற்படுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே தடை விதித்திருந்தமையும் அதற்கு எதிராக மஹிந்த ராஜபக்ஷ தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தமையும் தெரிந்தவையே.

அந்த மேன்முறையீட்டு மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுக்கவே முன்னர் மன்றில் பிரேரிக்கப்பட்டது. ஆனால் நேற்று வேண்டாம், இன்று நீதிமன்றத்தில் அதனை விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று மஹிந்த தரப்பு சட்டத்தரணி ஒற்றைக் காலில் நின்று விசாரணைத் திகதியை மாற்றிக்கொண்டார்.

அதனை அவதானித்த ரணில் தரப்பு என்ன விடயம் என்று தேடி நோண்டிப் பார்த்தது.

இன்றைய தினத்துக்கான உயர்நீதிமன்ற அட்டவணைப்படி ஒரேயொரு உயர் நீதிமன்ற ஆயமே இன்று கூடுகின்றது. அதற்குத் தலைமை மூத்த நீதியரசர் ஈவா வன சுந்தர அம்மையார்.

இவர் மஹிந்த ராஜபக்ஷவினால் நீதியரசராக நியமிக்கப்பட்டவர். நேற்று அதிரடித் தீர்ப்பு வழங்கப்பட்ட ஏழு நீதியரசர்கள் ஆயத்தில் இவர் இல்லை. இவருக்கு முன்னால் இந்த மேன்முறையீட்டு வழக்கை எடுக்கச் செய்யவே துடியாய் துடித்தது மஹிந்த தரப்பு. அதனால்தான் அந்த வழக்கை ஈவா வனசுந்தர தலைமையில் ஒரேயொரு ஆயம் கூடும் தினத்துக்கு வழக்கை நகர்த்தியிருக்கிறது அத்தரப்பு.

இந்த மேன்முறையீட்டில் எதிர் மனுதாரர்கள் ஐ.தே. முன்னணி, தமிழ்க் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியவற்றைச் சேர்ந்தோர். அவர்களில் அறுபது பேர் சார்பில் இந்த மேன்முறையீட்டை ஒட்டி நேற்று நகர்த்தல் விண்ணப்பம் ஒன்று நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மேன்முறையீட்டு மனுவை நீதியரசர் ஈவா வனசுந்தர அம்மையார் அடங்கிய ஆயம் விசாரிக்கக் கூடாது என்று அவர்கள் தமது விண்ணப்பத்தில் கோரியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி வெளியான 'தேசய' என்ற பத்திரிகையில் ஈவா வனசுந்தர அம்மையாரின் பேட்டி ஒன்று வெளியானது. அதில், தமக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான நட்பு, சட்டக் கல்லூரியில் இருந்து தங்களுக்கு இடையில் நிலவி வந்த நட்புடன் கூடிய நெருக்கம், தம்மைத் திடீரென அழைத்து நீதியரசராக நியமிக்கத் தாம் முடிவு செய்திருக்கின்றமையை ஜனாதிபதி ராஜபக்ஷ தெரியப்படுத்திய விதம், தனது கணவரிடம் கூட கலந்தாலோசிக்காமல் உடனேயே சம்மதம் சொல்லும் அளவுக்குத் தமக்கும் மஹிந்த ராஜபக்வுக்கும் இடையில் நிலவும் நெருக்க உரிமை பற்றியெல்லாம் ஈவா வனசுந்தர பிரஸ்தாபித்திருந்தார். அவ்வளவு தூரம் மஹிந்த ராஜபக்ஷவுடன் நெருக்கமாக உள்ள ஒருவர் மஹிந்த ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட மேன்முறையீட்டை விசாரிக்கக் கூடாது என்பதே இந்த அறுபது பேரின் சார்பில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட மனுவில் கோரப்பட்டுள்ளது.

இன்று நீதியரசர் ஈவா வனசுந்தர தலைமையிலான ஆயத்தின் முன் இந்த அறுபது பேரின் விண்ணப்பங்களும் கூட சேர்த்துத்தான் எடுக்கப்படவிருக்கின்றன. நீதியரசர் ஈவா வனசுந்தர அம்மையார் என்ன செய்வார் என்பது இன்று பகல் தெரிந்துவிடும்.

நேற்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றிரவு அறிவித்தாராயினும் இன்றைய நீதிமன்ற நடவடிக்கை போக்கைப் பார்த்தே தமது அடுத்த கட்ட நகர்வைச் செய்ய அவரும் மஹிந்தரும் பார்த்திருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

நேற்று உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பை வழங்கிய பின்னரும், ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக நியமிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்ந்தும் அடம்பிடிக்கின்றார் என்று செய்திகள் வெளியானாலும் –

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் புதிய – நிலையான – உறுதியான – அரசை அமைப்பதற்கு அவர் உறுதி பூண்டுள்ளார் என்றும் –

ரணில் விக்கிரமசிங்கவை வேறு வழியின்றிப் பிரதமராக ஏற்பதற்கு அவர் இணங்கியுள்ளார் என்றும் –

சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்றிரவு தமக்கு நெருக்கமான ஒரு தரப்பிடம் கூறினார் என மிக நம்பகரமாக – உறுதியாக –அறிய முடிந்தது.

எப்படிஎன்றாலும் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு ஒரு தீர்வு வந்து, ஜனநாயக அரசு அதிகாரத்துக்கு வந்தால் சரி, அது நடக்குமா...?

- மின்னல் -

## ரணிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதாகக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது ரணிலை மாத்திரம் ஆட்சியில் அமர்த்துவதை மாத்திரமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகிறது என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிப்பதால் மாத்திரம் புதிய அரசமைப்பு, அரசியல் கைதிகள் பிரச்சினை, காணி விடுவிப்பு போன்றவற்றை ஏற்படுத்தலாம் என்பது கேள்விக்குறியே என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், கட்டைப்பிராயில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் பிரதமராக நியமிக்கும் வகையிலான நம்பிக்கைப் பிரேரணைக்கு 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்துள்ளார்கள். இதற்குள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றார்கள். இவ்வாறான நிலையில் இந்தப் பிரேரணை தொடர்பில் நடுநிலைமை வகிக்குமாறு கூட்டமைப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியபோதும் அதனை நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஆதரவை வழங்கியிருந்தது.

இது தொடர்பாகக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் கூறும்போது, தாம் எந்தவிதமான நிபந்தனைகளையும் முன்வைக்காமல் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காகவே ஆதரவு வழங்கினோம் எனக் கூறியிருந்தார்.

அதேநேரம் கூட்டமைப்பின் வேறு சில நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சாந்தி போன்றோர், ரணில் விக்கிரமசிங்கவிடம் எழுத்து மூலமான உறுதிமொழியைப் பெற்றுவிட்டதாகவும், பிரதமராக ரணில் தெரிவான பின்னர் காணி விடுவிப்பு அரசியல் கைதிகளின் விடுதலை, ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் தீர்மானம் போன்றவற்றை நிறைவேற்றுவதாக எழுத்து மூலமான சம்மதத்தை பெற்றுவிட்டதாகவும் கூறியிருந்தார்கள்.

ஆனால் கூட்டமைப்பின் பேச்சாளர், இவற்றை நிராகரித்து தாம் அவ்வாறான எந்த உத்தர வாதங்களையும் பெறவில்லை எனவும் ஜனநாநகத்தை நிலை நாட்டவே ஆதரவு வழங்கியதாகவும் கூறுகிறார். மாவை சேனாதிராசா, எழுத்து மூலமான ஆதரவு பெறப்பட்டது, பெறப்படவில்லை என இரண்டும் கெட்டான நிலையில் பதிலளித்தார் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இது தொடர்பாகத் தமிழ் மக்களுக்கு உண்மை நிலையைத் தெளிவுபடுத்தாமல் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் ஒவ்வொரு கருத்தைத் தெரிவித்து வருகின்றார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் வாக்களித்தமை தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுகளையும், அன்றாட பிரச்சினைக்களுக்கான தீர்வையும் பெற்றுக்கொள்ளவே.

தற்போது ஏற்பட்டுள்ள இந்த அரசியல் குழப்பகரமான நிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி உறுதியான தீர்மானங்களை பெற்றுக்கொள்ளும் வகையில் கூட்டமைப்பு செயற்பட வேண்டும் எனவும், அதற்கு இலங்கையின் அரசியல் பிரச்சினையில் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் சர்வதேசத் தரப்பான அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளுடனும் பேச்சு நடத்தி உறுதியான உத்தர வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் பல்வேறு தரப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இவற்றைப் புறம்தள்ளி, ரணில் விக்கிரமசிங்கவை மாத்திரம் ஆட்சி அதிகாரத்தில் கொண்டுவருவது என்ற ஒற்றைக் கொள்கையில் செயற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியை தவிர்த்து அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கோ அல்லது காணி விடுவிப்புக்கோ தீர்வை வழங்கமுடியாது. எனவே அதற்கு ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் ஒற்றுமையும் அவசியமாகும் – என்றார். (ஐ–07)

## அரசிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பில் உயர் நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பை அடுத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னரே, தாங்கள் அடுத்த கட்ட முடிவை எடுக்கத் தீர்மானிக்கவுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தீர்ப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுள்ள ரணில் விக்கிரமசிங்கவை இன்றிரவே (நேற்று) பிரதமராக நியமிப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரண் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னர் நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அரசைத் தொடர்ந்தும் கொண்டு செல்வதற்கு நாங்கள் ஆயத்தமாக இருக்கின்றோம். ரணில் விக்கிரசிங்கவுக்குப் பிரதமர் பதவியை கொடுக்க முடியாது என்று ஜனாதிபதி கூறுவதானது, அது அவருக்கே கொடுக்கப்படும் என்பதாகப் பார்க்கப்பட வேண்டும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது தவறு என்று உயர்நீதிமன்றத்தில் ஏழு நீதியரசர்களும் தங்களுடைய தீர்மானத்தை அறிவித்துள்ளனர். நாட்டின் ஜனநாயகத்துக்கும், சட்டத்துக்கும், நீதிக்கும் இன்று பாரிய வெற்றி கிடைத்துள்ளது. நீதித்துறை நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாத்துள்ளது.

அடுத்தகட்டமாக புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்ட பின்னர் இடைக்கால வரவு, செலவுத் திட்டத்தைக் கொண்டுவந்து நாடாளுமன்றத்தில் அதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வோம். இன்று (நேற்று) பிற்பகல் 2 மணிக் கும் 6 மணிக்கும் இடையில் ஜனாதிபதி எங்களைச் சந்திக்க விருக்கிறார் என மூன்றாம் தரப்பினூடாக கேள்விப்பட்டோம். அதற்கான வாய்ப்பிருக்கிறது.

மஹிந்த தலைமையிலான அமைச்சரவைக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவுக்கு எதிராக, உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் தொடர்பில் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது. இது தொடர்பில் நாங்கள் மீளாய்வு மனுவொன்றை கையளிக்கவுள்ளோம் – என்றார். (ஐ)

# கணிசமான வாக்குகளைப் பறி கொடுத்து தடுமாறுகின்றது பாரதீய ஜனதாக் கட்சி!

இந்தியாவில் அண்மையில் நடைபெற்று முடிந்த ஐந்து மாநில தேர்தல் முடிவுகளில் வாக்கு வங்கியை பாரதீய ஜனதா கட்சி கணிசமாக இழந்து உள்ளது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தல்களில் அக்கட்சி எதிர் கொள்ளக் கூடிய பின்னடைவுக்கு கட்டியம் கூறுவதாக இந்தத் தேர்தல் முடிவுகளை ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ராஜஸ்தான், சத்தீஸ்கார் ஆகிய 2 மாநிலங்களில் ஆளும் பாரதீய ஜனதாவிடம் இருந்து காங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றி இருக்கிறது.

தெலுங்கானாவில் தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சி அங்கு காங்கிரஸ் – தெலுங்குதேசம் கூட்டணியை வீழ்த்தி அமோக வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டு உள்ளது.

வடகிழக்கு மாநிலமான மிஸோரமில் காங்கிரஸிடம் இருந்து மிஸோ தேசிய முன்னணி ஆட்சியைப் பறித்து உள்ளது. இதன்மூலம் அங்கு காங்கிரஸ் சகாப்தம் முடிவுக்கு வந்து உள்ளது.

மத்திய பிரதேசத்தில் இழுபறி நிலை ஏற்பட்டு உள்ளது. இருந்தாலும் காங்கிரஸே ஆட்சி அமைக்க வாய்ப்பு அதிகம் உள்ளது.

### சத்தீஸ்கார்

சத்தீஸ்கார் மாநிலத்தில் உள்ள மொத்தம் 90 இடங்களில், காங்கிரஸ் 68 தொகுதிகளை வென்றது. பா.ஜ.க. 15, சத்தீஸ்கார் ஜனதா காங்கிரஸ் 5, பகுஜன் சமாஜ் கட்சி 2 தொகுதிகளையும் கைப்பற்றி உள்ளன.

காங்கிரஸ் இந்த தேர்தலில் 43 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளது. 2013 மாநில தேர்தலில் 40.3 சதவீதமாக இருந்தது.

பா.ஜ.க. வாக்குகள் 2013 இல் 41சதவீதமாக இருந்து, 2018 தேர்தலில் 33 சதவீதமாக ஆக வீழ்ச்சியடைந்து உள்ளது. பகுஜன் சமாஜ் கட்சிக்கு 3.9 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன. முன்னாள் முதலமைச்சர் ஜோகியின் கட்சியான ஜனதா காங்கிரஸ் சத்தீஸ்கார் (ஜே)யுடன் அதன் கூட்டணி 7.6 வீத வாக்குகளைப் பெற்று உள்ளது. சுயேச்சைகள் 6.9 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளனர்.

### ராஜஸ்தான்

ராஜஸ்தானில் உள்ள 200 சட்டசபை தொகுதிகளில் வாக்குப் பதிவு 199 தொகுதிகளில் மட்டுமே நடைபெற்றது. வேட்பாளரின் மரணத்தின் காரணமாக ஒரு தொகுதியில் மட்டும் வாக்குப் பதிவு நடைபெறவில்லை.

5 ஆண்டுகளுக்கு முன் ஆட்சியைக் கைப்பற்றிய பாரதீய ஜனதா இந்த முறை 73 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று உள்ளது. காங்கிரஸ் 99 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி 6 தொகுதிகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 2 இடங்களையும், ராஷ்டீரிய லோக்தாந்த்ரீக் கட்சி 3 இடங்களையும், பாரதீய பழங்குடியின கட்சி 2 இடங்களையும், ராஷ்டீரிய லோக்தள் ஓர் இடத்தையும் கைப்பற்றி உள்ளன. சுயேச்சைகள் அதிகமாக 13 இடங்களைக் கைப்பற்றி உள்ளனர்.

கடந்த தேர்தலில் 45.2 சதவீத வாக்குகள் பெற்ற பாரதீய ஜனதா இந்த முறை 38.8 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்று உள்ளது. காங்கிரஸ் 39.3 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளது. சுயேச்சைகள் மட்டும் 9.5 சத்வீத வாக்குகளைப் பெற்று உள்ளனர்.

### மத்திய பிரதேசம்

மத்திய பிரதேசத்தில் காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க.வுக்கு இடையே சிறிதளவு வித்தியாசங்களே உள்ளன. காங்கிரஸ் 114 இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளது. பாரதீய ஜனதா 108 தொகுதிகளில் வெற்றி பெற்று உள்ளது. பகுஜன் சமாஜ் 2 இடங்களிலும், சமாஜ்வாதி கட்சி ஓர் இடத்திலும், சுயேச்சைகள் 4 இடங்களிலும் வெற்றி பெற்று உள்ளன.

கடந்த முறை 36.4 சதவீத வாக்குகள் வாங்கிய காங்கிரஸ் இந்த முறை 40.9 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளது. பாரதீய ஜனதா 44.9 சதவீததில் இருந்து 41 சவீதமாக குறைந்து உள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி 5 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளது.

### தெலுங்கானா

தெலுங்கானாவில் சந்திரசேகர ராவின் ராஷ்டீரிய கட்சி வரலாற்று வெற்றியைப் பெற்று உள்ளது. மொத்தம் உள்ள 119 தொகுதிகளில் 88 இடங்களில் வெற்றி பெற்று உள்ளது. காங்கிரஸ் 19 இடங்களையே பெற்றது. இது, கடந்த முறையை விட 2 இடங்கள் குறைவாகும். கடந்த முறை 2014 இல் 15 இடங்களைக் கைப்பற்றிய தெலுங்கு தேசம் கட்சி இந்த முறை 2 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்று உள்ளது. அனைத்து இந்திய மஜ்லீஸ் கட்சி இந்த முறை 7 இடங்களில் வெற்றி பெற்று உள்ளது.

ராஷ்டீரிய சமிதி கட்சி கடந்த தேர்தலில் 34 சதவீத வாக்குகளைப் பெற்று இருந்தது. இந்த முறை 46.9 சதவீத வாக்குகளைப் பெற்று உள்ளது. காங்கிரஸின் வாக்கு சதவீதம் 25.2 சதவீதத்தில் இருந்து 28.4 சதவீதமாக உயர்ந்து உள்ளது. பா.ஜ.க. 7 சதவீத வாக்குகளையும், தெலுங்கு தேசம் 3.5 சதவீத வாக்குகளையும் பெற்று உள்ளன.

### மிஸோரம்

மிஸோரம் மாநிலத்தில் மிஸோ தேசிய முன்னணி 26 தொகுதிகளை கைப்பற்றி ஆட்சி அமைக்கிறது. காங்கிரஸ் 5 தொகுதிகளையும், பாரதீய ஜனதா ஓர் இடத்தையும், சுயேச்சைகள் 8 இடங்களையும் கைப்பற்றி உள்ளன. காங்கிரஸ் வாக்கு விகிதம் கடந்த முறை பெற்ற 45 சதவீதத்தில் இருந்து 30.2 சதவீதமாகக் குறைந்து உள்ளது. பா.ஜ.கவின் வாக்குகள் 1.6 சதவீதத்தில் இருந்து 8 சதவீதமாக ஐந்து மடங்கு உயர்ந்துள்ளது.





NEW SCIENCE HALL
KANNATHIDDY,
JAFFNA.
2021 A/L
கணித, உயிரியல் பிரிவு

தமிழ்மொழி மூலம்

PHYSICS
திரு.S. சோதிலிங்கம் - திரு.N.கபிலன்
திரு.G. பிரபா - திரு.K.செல்வன்

CHEMISTRY
திரு.K. சிவத்திரன் - திரு.N.மகேஸ்வரன்
திரு.G. BENO - திரு.T. சுசாந்தன்

BIOLOGY
எமது வழமையான ஆசிரியருடன்
திரு.T. கெங்காதரன் - திரு.K.இராகவன்

COM.MATHS
திரு.P. செந்தில்நாதன் - திரு.S.சிவகரன்

ENGLISH MEDIUM

PHYSICS
MR.S.SOTHILINGAM
MR.M.KUGANESWARAN

CHEMISTRY
MR.G.BENO
MR.N.MAHESWARAN

BIOLOGY
Our Usual Teacher
MR.S.P.NAGANATHAN

COM.MATHS
MR.P.SENTHILNATHAN
MR.S.SIVAKARAN

ஆரம்பம்: இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி

https://facebook.com/new science.hall jaffna 077 791 7611

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## திரும்பவும் நீதிமன்றுக்கு...!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஒக்ரோபர் 25ஆம் திகதி முதல் அதிரடி நடவடிக்கைகளாக இழைத்து வரும் அரசியல் தவறுகளுக்கு அடுத்தடுத்து நெத்தியடி உடக்குடன் கிடைத்து வருகின்றது.

அந்த வகையில் தம்மிஷ்டப்படி – எதேச்சாதிகாரமாக – நாடாளுமன்றத்தைக் கலைத்த ஜனாதிபதியின் முடிவுக்கு உயர் நீதிமன்றம் சாட்டையடி கொடுத்திருக்கின்றது.

அரசமைப்பு வாசகங்களைத் தமக்கேற்றபடி – தம்மிச்சைப்படி – வியாக்கியானம் செய்ய முற்பட்ட ஜனாதிபதிக்கும் அவரது சட்டக் குழுவினருக்கும் உயர் நீதிமன்றம் நல்ல சூடு வைத்திருக்கின்றது என்றே கொள்ளவேண்டும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவித்தலுக்கு எதிரான இடைக்காலத் தடையை பிரதம நீதியரசர் உள்ளிட்ட மூன்று நீதியரசர்களைக் கொண்ட ஆயமே முதலில் வழங்கியது.

ஆனால் அதை ஏற்றுக்கொள்ளப் பின்னடித்த அரசுத் தரப்பு – ஜனாதிபதி தரப்பு – முழுமையான உயர் நீதிமன்ற ஆயம் வேண்டும் என்று விண்ணப்பித்தது.

அந்தத் தரப்பின் கோரிக்கையை ஏற்றே ஏழு நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னாள் இந்த விடயம் விசாரணை செய்யப்பட்டது. மணித்தியாலக் கணக்காக நீண்ட நேரம் – பல தரப்புகளினால் – முன்வைக்கப்பட்ட வாதங்களை மரதன் அமர்வுகளின் போது சளைக்காமல் – சலிக்காமல் – தொடர்ந்து செவிமடுத்த ஏழு நீதியரசர் குழாம் இறுதியாக நேற்று ஏகமனதாகத் தீர்ப்பை வழங்கியிருக்கின்றது.

தீர்ப்புக்களை ஆறு நீதியரசர்கள் சேர்ந்தும் ஒருவர் தனியாகவும் காரணங்களோடு வழங்கினாலும் அத் தீர்ப்பின் சாராம்சம் ஒன்றுதான்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி உத்தரவு சட்டவிரோதமானது, தவறானது என்பதை ஏழு நீதியரசர்களுமே ஏகமனதாக – ஒரே குரலில் – அறிவித்திருக்கின்றனர்.

அரசமைப்புக்குச் செய்யப்பட்ட 19 ஆவது திருத்தத்தின்படி ஒரு நாடாளுமன்றம் பொதுத் தேர்தலின் மூலம் தெரிவுசெய்யப்பட்டு, அதன் பதவிக் காலம் நான்கரை ஆண்டுகள் முடிவுற முன்னர் அந்த நாடாளுமன்றமே மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் இணக்கத்துடன் ஒரு தீர்மானம் மூலம் கோரினாலேயே ஒழிய அதை ஜனாதிபதி கலைக்க முடியாது என்று திட்டவட்டமாக உள்ளது.

ஆனால் அந்த அரசமைப்பு ஏற்பாடுகளை மீறி தம்பாட்டில் நாடாளுமன்றத்தை எதேச்சாதிகாரமாகக் கலைத்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவரது இந்த நடவடிக்கை அரசமைப்பு மீறல் என்று நாட்டின் அதிஉச்ச நீதி ஆயமான உயர் நீதிமன்றம் ஏகமனதாகத் தீர்மானித்து அறிவித்துவிட்டது.

நாட்டில் அதிகாரத்தில் இருக்கும் ஒரு ஜனாதிபதியின் நடவடிக்கை அரசமைப்பு மீறல் – சட்ட மீறல் – என்று உயர் நீதிமன்றமே ஏழு நீதியரசர்கள் ஆயம் மூலம் அப்பட்டமாகச் சட்டச் சூடு வைத்த முதல் சம்பவம் இது.

முதலில் ஜனாதிபதி பதவியில் இருப்பவரை இவ்வாறான சட்ட மீறல் – அல்லது அரசமைப்பு மீறல் – செயற்பாடுகளுக்குத் தூண்டி, ஆலோசனை வழங்கிய சட்டநிபுணர்கள், ஆலோசகர்கள் யார் என்பது அம்பலப்படுத்தப்பட வேண்டும்.

ஏற்கனவே நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் இல்லாத – அல்லது நாடாளுமன்றத்தினால் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் மூலம் வீழ்த்தப்பட்ட – ஒருவரைப் பிரதமராகக் கொண்டு, ஓர் அமைச்சரவையோடு ஆட்சியை நடத்தி வந்தமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது.

இப்போது நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் வர்த்தமானி உத்தரவுக்கு எதிராகத் தான் விதித்திருந்த இடைக்காலத் தடையை நிரந்தரத் தீர்ப்பாக வழங்கி சட்டத்தின் ஆட்சியை நிலை நாட்டியிருக்கின்றது உயர் நீதிமன்றம்.


இதற்குப் பின்னரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திருந்தப் போவதில்லை என்றுதான் தெரிகின்றது. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் என்ற நிலைப்பாட்டிலிருந்து அவர் மாறமாட்டார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றவரைப் பிரதமராக நியமிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி அடாவழித்தனம் பண்ணுவது அரசமைப்பை மீறும் நடவடிக்கை என்று உயர் நீதிமன்றுக்குச் சென்று முறையிட்டு உயர் நீதிமன்றத் தீர்ப்பு மூலம் குட்டுப்போட வைத்தால்தான் ஜனாதிபதி திருந்துவார் போல.

இனி என்ன...? மீண்டும் உயர்நீதிமன்றதை நோக்கித் திரும்பவும் ஒரு தடவை ஐ.தே.முன்னணி நடைபோட வேண்டியதுதான்!

# தமிழரைத் தொடர்ந்து ஓரம் கட்டுகிறது அரசு

## முன்னாள் முதல்வர் விக்கி சாடல்



யாழ்ப்பாணம், டிசெ. 14

தமிழ் மக்களை ஓரங்கட்டும் செயற்பாட்டினை இலங்கை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

பளை பிரதேச வைத்திய சாலையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களை ஓரங் கட்டும் விதத்தில் அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளுக்கு எதிராக எமது மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கு எமது அரச அதிகாரிகள் எவ்வாறு சேவையாற்ற வேண்டும் என்பதனைப் படம்போட்டுக் காட்டுகின்ற ஒருசெயற்பாடாகவே நான் இந்தக் கண்காட்சியைப் பார்க்கின்றேன்.

அரச அதிபர்களும், மாவட்ட செயலாளர்களும், கிராம சேவையாளர்களும் சட்டத்தால் பிரித்தெடுக்கப்பட்டிருந்தாலும் சதையால் அவர்கள் எம்மவர்கள் என்பதை நாங்கள் மறந்து விடலாகாது. மாகாணமும் மத்தியும் அவர்கள் ஊடாக எம்மிடையே மறுமலர்ச்சியை உண்டாக்க வேண்டும்.

பொது மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் ஏன் சில அலுவலர்களுந்தான் தம்மை எவ்வாறு வளப்படுத்திக்கொள்ள முடியும் என்றே சதா சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்பதே இன்றைய யதார்த்த நிலை.

இந்தச் சூழ்நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் மிகுந்த வரவேற்பை மக்களிடம் இருந்து பெறுவன என்று எதிர்பார்க்கலாம். இன்றைய அரச அலுவலர்களின் மனங்களில் சிந்தனைத்தெளிவு ஏற்பட வேண்டும்.

தம்மை வளப்படுத்துவதையும் அரச நிதிகளைக் கபளீகரம் செய்வதையும் முதன்மையாகக் கருதாது ஒவ்வொரு திணைக்களமும் தமக்குக் கிடைக்கின்ற நிதிகளை முழுமையாக மக்கள் சேவைகளுக்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் முறையாக உபயோகிக்க முன்வர வேண்டும் என வேண்டிக்கொள்கின்றேன்– என்றார். (ஐ)

# மஹிந்த – ரணில் இருவருமே பிரதமராகத் தகுதியற்றவர்கள்

## சபையில் அநுரகுமார சாடல்

கொழும்பு, டிசெ. 14

மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க இருவருமே பிரதமர் கதிரைக்கு ஏற்புடையவர்கள் அல்லர் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சபையில் நேற்றுமுன்தினம் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக சஜித் பிரேமதாஸ முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசின் எதிர்காலம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலன்றி தமது செயற்பாடுகள், அமைச்சரவை, ஆட்சி நிர்வாகம், மக்கள் நம்பிக்கை என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக எண்ணிக்கையின் அடிப்படையில் பெரும்பான்மையை நிரூபித்து வந்த நல்லாட்சி, மக்கள் நம்பிக்கையை வெல்லத் தவறிவிட்டது.

ஒக்ரோபர் 26ஆம் திகதி சூழ்ச்சியை மைத்திரிபால சிறிசேன தமது அரசியல் தேவை கருதி செய்தார். மஹிந்தவும் அதற்குப் பங்காளி. அப்படியொரு சூழலை உருவாக்கவதற்கான பின்னணி குறித்து புரிந்து கொள்ள வேண்டும். நான் அந்த விடயத்தை நியாயப்படுத்தவில்லை. ஜனாதிபதி அவ்வாறு செய்ய ஏன் முனைந்தார்? மக்களுடைய தேவைகளை நிறைவேற்றாமல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் செயற்பட்ட காரணத்தால் இந்நிலைமை ஏற்பட்டது.

ரணில் – மஹிந்த இருவரும் இந்தக் கதிரைகளில் இருந்து ஆட்சி செய்த சந்தர்ப்பத்தைப் பார்த்துள்ளனர். ஒக்ரோபர் 26ஆம் திகதி ஆட்சியைப் பிடித்த விடயமே எமக்குப் பிரச்சினை. மஹிந்த பதவிக்கு வந்ததோ, ரணில் சென்றதோ எமக்குப் பிரச்சினை கிடையாது.

அரசியல் ரீதியில் நாம் ஒரு நிலைப்பாட்டில் உள்ளோம். நாடாளுமன்றிலும் சரி நீதிமன்றிலும் சரி அரசியல் சூழ்ச்சிக்கு எதிராகச் செயற்படுவோம். ரணில் இந்தக் கதிரையில் அமர்ந்தால் எந்தப் புதிய விடயமும் இடம்பெறாது – என்றார். (ஐ)

# எந்தவிதமான உடன்பாடுமே கூட்டமைப்புடன் கிடையாது

## சஜித் பிரேமதாஸ கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 14

ஐ.தே.க. தலைவருக்கான நம்பிக்கை பிரேரணை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்ளப்படவில்லையென ஐ.தே.க.வின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ரணிலுக்கான நம்பிக்கைப் பிரேரணைக்குக் கூட்டமைப்பு ஆதரவளித்ததால், இரு தரப்புக்கும் இடையில் உடன்பாடொன்று எட்டப்பட்டுள்ளதாகச் சிலர் தெரிவித்து வருவதாகக் குறிப்பிட்ட சஜித், அதனை முற்றாக மறுத்தார்.

நேற்று முன் தினம் நாடாளுமன்றில் நிறைவேறிய ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீதான நம்பிக்கை பிரேரணையைத் தொடர்ந்து, நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நாம் எவ்வித உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டியது எமது தார்மீகக் கடமை. கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவடைந்த உடனே வடக்கு கிழக்கில் அபிவிருத்தியை மேற்கொண்டிருக்கவேண்டும். கடந்த 3 வருட காலத்தில் துரதிஷ்டவசமாக எமக்கும் அதனை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது.

வடக்கு – கிழக்கில் அபிவிருத்தியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த முடியாமல் போய்விட்டது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டியது எமது கடமை. அதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எவ்வித உடன்படிக்கையும் செய்து கொள்ளப்படவில்லை. எமக்கான கடமை என்ற ரீதியில் அதனை நிறைவேற்றுவோம் – என்றார். (ஐ)

## நாளை

15.12.2018
சனிக்கிழமை

நட்சத்திரம்: பூராட்டம் மு.இ 10.52 வரை
திதி : அட்டமி பி.இ 3.14 வரை
சுபநேரம் : 3.21 – 4.51 வரை
இராகுகாலம் : 9.21 – 10.51 வரை

# முகமூடிகளுடன் வந்த கும்பல் வீட்டுக்குள் நுழைந்து அடாவடி

## காரையும் அடித்து நொருக்கி அட்டகாசம் அரியாலையில் நேற்று அதிகாலை சம்பவம்






யாழ்ப்பாணம், டிசெ. 14

அரியாலையிலுள்ள வீடொன்றுக்குள் முகமூடி அணிந்து வாள்களுடன் நுழைந்த வாள்வெட்டுக் கும்பலொன்று வீட்டையும் வீட்டிலிருந்த பொருள்களையும் அடித்து நொருக்கி அட்டகாசத்தில் ஈடுபட்டுள்ளது.

இந்தச் சம்பவம் அரியாலை புருடி வீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ஒருவரின் வீட்டில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை நடைபெற்றுள்ளது.

அந்த வீட்டுக்குள் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிளில் நான்கு பேர் முகமூடிகளை அணிந்து வாள்களுடன் சென்றுள்ளனர். இதன்போது வீட்டின் முன்பாக இருந்த மின்குமிழை அடித்து உடைத்ததுடன் வீட்டின் முன் பக்கக் கதவையும் வெட்டியுள்ளனர். இதனைத் தொடர்ந்து வீட்டின் முன் பக்கக் கதவு பூட்டப்பட்டிருந்ததால் இரண்டு பேர் வாள்களுடன் வீட்டின் மதில் பாய்ந்து உள்ளே நுழைந்துள்ளனர்.

இவ்வாறு வாள்களுடன் உள்ளே சென்றவர்கள் வீட்டின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றை முற்றாக அடித்து உடைத்துள்ளனர். அதனைத் தொடர்ந்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து நொருக்கினர். வீட்டிலிருந்தவர்கள் அச்சம் காரணமாக வெளியே வரவில்லை.

இவ்வாறு கார் மற்றும் வீட்டை அடித்து நொருக்கி அட்டகாசத்தில் ஈடுபட்ட பின்னர் அவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர். இதனையடுத்தே வீட்டுக்காரர்கள் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தமையுடன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும்பதிவுசெய்தர். இதனையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ – 07)

# வட்டுக்கோட்டையில் பகலில் திருட்டு: முறைப்பாட்டாளரின் மகள் கைதானார்

வட்டுக்கோட்டை கிழக்கில் பட்டப்பகலில் வீடு புகுந்து நகைகள் திருட்டு என்று வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் முறைப்பாட்டாளரின் மகள்தான் நகைகளைத் திருடினார் என்பது தெரியவந்தது. சந்தேகநபரான அந்த இளம் பெண் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை கிழக்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பட்டப்பகலில் வீடு புகுந்து நகைகள் திருட்டு என்று ஊடகங்களில் செய்தி வெளியாகியது. வீட்டின் குடும்பத் தலைவரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் அந்தச் செய்தி வெளியாகியிருந்தது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதனையடுத்து திருடப்பட்ட நகைகள் வீட்டு வளவுக்குள் போடப்பட்டிருந்தன. அவற்றை அந்த வீட்டு வளவுக்குள் வீசிவிட்டு இளைஞர் ஒருவர் முறைப்பாட்டாளரின் மனைவிக்கு அலைபேசியில் அழைப்பு எடுத்து நகைகள் போடப்பட்டுள்ள இடம் தொடர்பில் தகவல் வழங்கியுள்ளார்.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தனது தாயாரின் நகைகளைத் திருடிய முறைப்பாட்டாளரின் மகள், அவற்றை தனது காதலனிடம் வழங்கியுள்ளார் எனக் கண்டுபிடித்தனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து தடயங்களைச்சேகரித்ததால், அந்த இளைஞன் தனது காதலி வழங்கிய நகைகளைக் கொண்டு வந்து வீட்டு வளவுக்குள் வீசிவிட்டுச் சென்றுள்ளார்.

அதனால் வீட்டிலிருந்த நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் முறைப்பாட்டாளரின் மகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். நகைகள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அல்ல அதற்கு முன்னரே திருடப்பட்டுள்ளன என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# காரைநகரில் வளர்ந்திருந்த பாதீனியம் செடிகள் அழிப்பு

## மாணவர்கள், மக்களுக்கு விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், டிசெ. 14

காரைநகர் பெரியடைப்பு – மருதபுரம் வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த பாதீனியச் செடிகள் அப்பிரதேசத்திலுள்ள மாணவர்கள் மற்றும் மக்களின் உதவியுடன் நேற்று வியாழக்கிழமை காலை அழிக்கப்பட்டன.

இந்த வீதிப் புனரமைப்பிற்காக வெளி இடத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணுடன் இங்கு பாதீனியம் கடத்தப்பட்டிருந்தது. மண் பறிக்கப்பட்ட இடங்களிலும் அதை அண்டிய பகுதிகளிலும் பாதீனியம் பரந்து வளர்ந்திருந்தது.

காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கத்தின் வழிப்படுத்தலுடனும் மக்களின் உதவியுடனும் இதை அழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் முதற்கட்டமாகப் பாதீனியச் செடிகள் மற்றும் அதன் தாக்கம் தொடர்பாக அப்பிரதேச மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதையடுத்து அப்பிரதேச மாணவர்கள் பாதீனியத்தை அழிப்பதற்கு தாமாகவே முன்வந்தனர்.

உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவர்கள் பாதீனியத்தை அழிக்கும் பணியில் வழிப்படுத்தப்பட்டனர். பாடசாலை விடுமுறையை தாங்கள் நல்லதொரு செயற்பாட்டுக்கு செலவிட்டதை எண்ணி அவர்கள் மகிழ்ச்சி வெளியிட்டனர்.

இந்தப் பணியில் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.பொன்ராசா, காரை. மேற்கு கிராம சேவையாளர் சு. ஸ்ரீ ரமணன், பட்டதாரிப் பயிலுநர் ப.பத்மநாமா ஆகியோரும் பங்குபற்றினர்.

இதேவேளை, காரை.மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் சக்கலாவோடை என்ற இடத்தில் உள்ள நடராசா என்பவரின் காணியில் பரந்து வளர்ந்திருந்த பாதீனியம் அவரது உதவியுடன் அழிக்கப்பட்டது.

பள்ளமான அவரது காணியைச் சீர்செய்வதற்கு காரைநகருக்கு வெளியே இருந்து கொண்டுவரப்பட்ட மண்ணுடன் பாதீனியம் செடி கடத்தப்பட்டிருந்தை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மேற்படி பிரதேச மக்களுக்கு பாதீனியம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக விரைவில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தொடர்புகள் துண்டிக்கப்படும் ஆபத்தில் பழைய ஊற்றுப்புலம் பழைய குடியிருப்பு

கிளிநொச்சி, டிசெ. 14

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேசத்தில் ஊற்றுப்புலம் பழைய குடியிருப்புக்கான பிரதான பாதை துண்டிக்கப்படும் ஆபத்தில் உள்ளது.

ஊற்றுப்புலம் பிரதான பாதையில் உள்ள இரண்டு பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதி நீரினால் அரிக்கப்பட்டு முற்றாகப் போக்குவரத்து துண்டிக்கப்படும் ஆபத்து காணப்படுகிறது.

புதுமுறிப்பு குளம் புனரமைக்கப்பட்டு உயர்த்தப்பட்டு நீர் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டநிலையில் குளத்தின் பின்பகுதியான ஊற்றுப்புலம் பிரதேசத்தில் நீர் நிறைந்து காணப்படுகிறது. இந்த நீரேந்துப் பகுதியை ஊடறுத்து பழைய குடியிருப்புக்கான பாதை உள்ளது.

இந்தப் பாதையிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்தப்பாதை துண்டிக்கப்படும் பட்சத்தில் ஊற்றுப்புலம் கிராமத்தின் பழைய குடியிருப்பில் வாழும் நூற்றுக்கணக்கான மக்களின் மாவட்டத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்படும் ஆபத்து ஏற்படும் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் அவரச வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ)



# சிவனொளிபாதமலையில் காட்டுத் தீ

நல்லதண்ணி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவனொளிபாதமலைக்கு சொந்தமான லக்ஷ்பானதோட்டம் முள்ளுகாமம் மேற்பிரிவு பிரதேச காட்டுப் பகுதியில் தீ பரவியுள்ளது.

நேற்று முன் தினம் இரவு முதல் பரவிவந்த காட்டுத்தீ பாதுகாப்பு படையினரின் உதவியுடன் நேற்றுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

விமானப்படை, இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி தீ கட்டுப்படுத்தப்பட்டதாக நல்லதண்ணிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காட்டுத் தீயினால் சுமார் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

இது விஷமிகளின் நாசக்கார செயல் எனச் சந்தேகிப்பதாக தெரிவித்த நல்லதண்ணி பொலிஸார், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அம்பாந்தோட்டையில் கலவரம் ஒருவர் சாவு! 4 பொலிஸ் காயம்!!

கொழும்பு, டிசெ. 14

அம்பாந்தோட்டை – கட்டுவான பகுதியில் நேற்று முன்தினம் இரவு பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் உயிரிழந்தார். நான்கு பொலிஸார் காயமடைந்தனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கட்டுவான பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யும் இடமொன்றைச் சுற்றிவளைக்க முற்படுகையிலேயே பொலிஸாரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸார் மேற்கொண்ட இந்தத் தாக்குதலில் 50 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்தையடுத்தே மேற்கண்ட பதற்ற நிலை அப் பகுதியில் தோன்றியுள்ளது.

நந்த நபர் உயிரிழந்ததையடுத்து கோபமடைந்த அப்பகுதி மக்கள் பொலிஸார் மீது கற்களால் வீசித் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். மேலும் ரயர்களை எரித்தும் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். இதனால் நான்கு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து அப் பகுதியின் பாதுகாப்பு நடவடிக்கைக்காக விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு மக்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# படைமுகாம்கள் அருகே மனிதப் புதைகுழிகள்!

## அனந்தி சசிதரன் சந்தேகம்



மன்னார், டிசெ. 14

வடக்கு – கிழக்கில் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டிருந்த அனைத்து இடங்களிலும் மனிதப் புதைகுழிகள் காணப்படலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக வடக்கு மாகாண முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

எனவே, படையினர் வெளியேறியுள்ள இடங்களில் சர்வதேச கண்காணிப்பின் கீழ் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் மனித புதைகுழி விவகாரம் சர்வதேச மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், அது தொடர்பாக மன்னாரில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மனித புதைகுழியிலிருந்து கடந்த வாரம் இரும்பு கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் மனித எச்சம் கண்டுபிடிக்கப்பட்டது. இதிலிருந்து எமது மக்கள் எவ்வளவு கோரமாக சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு அடிமைகளாக கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்பது புலனாகிறது.

இந்த மனித எச்சங்கள் தமிழர்கள் என்ற காரணத்திற்காகக் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டுக் கொல்லப்பட்டவர்களாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்ற நிலையில் இந்த உண்மை வெளிச்சத்துக்கு வரவேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் புதைகுழி தொடர்பான மர்மங்கள் வெளிவருவதன் ஊடாகப் பல உண்மைகள் வெளிவரும் வாய்ப்புகள் உருவாகும் என்று நம்புகின்றோம் – என்றார்.(ஐ)

# மைத்திரியின் கைகளினால் விருதை ஏற்கவேமாட்டேன்

## நிகழ்வைப் புறக்கணிக்க பிரபல கலைஞர் முடிவு



ஜனநாயகத்துடன் விளையாடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேவின் கைகளினால் கலாபூஷண விருதைப்பெறுவதற்கு விரும்பவில்லை. எனவே, குறித்த நிகழ்வை நான் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளேன் – என்று பிரபல கலைஞர் டப்ளியூ ஜயசிறி அறிவித்துள்ளார்.

கலாபூஷண அரச விருது வழுங்கல் விழா நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு, கொழும்பு – 07, நெளும் பொக்குண தாமரைத் தடாக கலை அரங்கில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.

கலாசார, உள்ளக அலுவல்கள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்தே இக் கலாபூஷண அரச விருது வழுங்கல் வைபவத்தை, இத்தடவை 34 ஆவது முறையாக நடத்தவுள்ளன.

இந்நிகழ்வையே தான் புறக்கணிக்கபோகிறார் என முகநூலில் அறிவிப்பு விடுத்துள்ளார் ஜயசிறி. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தன்னால் இம்முடிவு எடுக்கப்பட்டது எனவும் கூறினார்.

# பேலியகொடையில் மனிதத் தலை மீட்பு

கொழும்பு, டிசெ. 14

பேலியகொடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துட்டுகெமுனு வீதியில் உள்ள தொழிற்சாலையொன்றின் வளாகத்திலிருந்து மனிதத் தலையொன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அவசரப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தத் தலை மீட்கப்பட்டுள்ளது.

இந்தத் தலை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பேலியகொடைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# எதிர்க்கட்சி என்ற உரிமையை இழந்துவிட்டது கூட்டமைப்பு

## சாடுகின்றது மஹிந்த தரப்பு



கொழும்பு, டிசெ. 14

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாக இருக்கும் தார்மீக உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்து விட்டது என்று மஹிந்த அணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நம்பிக்கைப் பிரேரணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்ததன் மூலம், பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் தார்மீக உரிமையைக் கூட்டமைப்பு இழந்து விட்டது.

இந்த நாடாளுமன்றம் தொடருமானால், எதிர்க்கட்சி என்ற பதவியில் இருந்து கூட்டமைப்பு விலக வேண்டும்.

அதேவேளை தற்போதைய அரசியல் நெருக்கடியை நிறைவேற்று அதிகாரமே, நீதித் துறையோ, நாடாளுமன்றமோ தீர்க்க முடியாது.

பொதுத்தேர்தல் ஒன்று தான் இதனைத் தீர்க்கக் கூடியது – என்றார். (ஐ)

# தொழிலாளர் போராட்டத்தை காட்டிக்கொடுத்த இ.தொ.கா.

## திகாம்பரம் எம்.பி. சாடல்

பெருந்தோட்டத் தொழிலார்களை ஏமாற்றும் இலங்கைத்தொழிலாளர்காங்கிரஸ்தொழிலாளர்களின் போராட்டத்தையும் காட்டிக் கொடுத்துள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டனியின் இணைத் தலைவர்களுள் ஒருவரான பழனி திகாம்பரம் குற்றம்சாட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

தமது அரசு அமைக்கப்பட்டதன் பின்னர் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ).

# வெண்சந்தன மரத்தை வெட்டியவரின் தலையைச் சீவிய வீட்டு உரிமையாளர்!

## இரத்தம் தோய்ந்த வாளுடன் பொலிஸில் சரண்

கொழும்பு, டிசெ. 14

வீட்டு வளவிலிருந்த வெண்சந்தன மரத்தை வெட்டிக் கொண்டு செல்ல முயற்சித்த நபரை, வாளால் வெட்டிக் கொலை செய்து, இரத்தம் தோய்ந்த வாளுடன் வீட்டுரிமையாளர் பதுளைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த சம்பவம் நேற்று பதுளையில் இடம் பெற்றுள்ளது.

பதுளை – சொரணாதொட்டையைச் சேர்ந்த 47 வயதான தம்மிக்க ரனதுங்க என்பவரே வெண்சந்தன மரத்தை வெட்டியதால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலையை மேற்கொண்ட நபர், இரத்தம் தோய்ந்த வாளுடன், பதுளைப் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். அதையடுத்து, கைது செய்யப்பட்ட இந்நபர், பதுளை நீதிமன்ற மேலதிக நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். நீதிபதி அந்நபரை இன்று வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஐ)

# அரசியல் நெருக்கடிக்குள்ளும் திட்டங்களை நிறுத்தாத சீனா



இலங்கையில் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக நீடித்துவரும் அரசியல் அதிகார நெருக்கடி நிலைக்கு மத்தியிலும் தமது அபிவிருத்தித் திட்டங்கள் எதனையுமே நிறுத்தாமல் முன்னெடுத்து வருவதாக இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் அரசியல் பிரிவுத் தலைவரும் பேச்சாளருமான லூவோ சொங் தெரிவித்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்ட அவர், கொழும்புத் துறைமுக நகரத்தின் முதலாம் கட்டம் பூர்த்தியடைந்துவிட்டது. அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளோம். அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதனைத்தவிர தெற்கு அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கப் பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை சீனாவில் இருந்து இலங்கை வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை எந்தளவிலும் குறைத்து விடவில்லை. உண்மையில் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நட்பு அனைத்துச் சோதனைகளையும் கடந்து காலத்தால் நீடிக்கின்ற உன்னதமான நட்பு. யார் ஆட்சியில் இருந்தாலும் சீனா இலங்கை மக்களுடனான நட்பை தொடர்ந்தும் மதித்து செயற்படும் – என்றார். (ஐ)

# யான் ஓயாவுக்கருகிலிருந்து ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, டிசெ. 14

ஹொரவபொத்தான அளுத்ஓயா வீதியில், ஹபகம பிரதேசத்தில், யான் ஓயாவுக்கு அருகில் நேற்று முன் தினம் ரி –56 ரகத் துப்பாக்கிகள் மற்றும் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கி ரவைகள் 970 என்பன பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் முழுவதும் ஹொவபொத்தான பொலிஸார் மற்றும் தலைமன்னார் கடற்படைப் பயிற்சி முகாம் சிப்பாய்கள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின்போதே, இவ்வாயுதங்கள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவற்றில் ரி 56 ரக துப்பாக்கிகள், 970 துப்பாக்கி ரவைகள், 2 வெடிக்குண்டுகள் உட்பட மேலும் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹொரவபொத்தானப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(ஐ)

# டெஸ்ட் தரவரிசையில் கோஹ்லி முதலிடம்!

சர்வதேசகிரிக்கெட்சபை வெளியிட்டுள்ள டெஸ்ட் கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களின்தரவரிசைப்பட்டியலில் பல மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

வாரந்தோறும் சிறப்பாக விளையாடும் அணிகள் மற்றும் வீரர்களின் தரவரிசைப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டு வருகிறது.

அதன்படி, இந்த வாரத்திற்கான டெஸ்ட் கிரிக்கெட் துடுப் பாட்ட வீரர்கள் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், மந்தமான அதாவது இரண்டு இன்னிங்சிலும் முறையே 3, 34 ஓட்டங்களைக் குவித்த இந்தியக் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோஹ்லி 15 புள்ளிகளைப் பறிகொடுத்து 920 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில், 89, 139 ஓட்டங்கள் எடுத்து அணியின் வெற்றிக்கு வித்திட்ட நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் 37 புள்ளிகளை மேலதிகமாக பெற்று 913 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

நியூசிலாந்து அணியின் வீரர் ஒருவர் 900 புள்ளிகளுக்கு மேல் குவித்து இருப்பது இதுவே முதல் முறையாகும். அத்துடன் உலக அளவில் இந்த மைல்கல்லை கடந்த 32ஆவது துடுப்பாட்ட வீரர் இவர் ஆவார். நியூசிலாந்து துடுப்பாட்ட வீரர்களில் வில்லியம்சன் புதிய உச்சத்தை எட்டியிருந்தாலும், அந்த நாட்டில் இருந்து ஏற்கனவே ஒரு பந்து வீச்சாளர், தரவரிசையில் 900 புள்ளிகளைக் கடந்திருக்கிறார். நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ரிச்சர்ட் ஹாட்லீ 1985ஆம் ஆண்டு 909 புள்ளிகளை பெற்றிருந்தது நினைவுகூரத்தக்கது.

பந்தைச் சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கித் தடையை அனுபவித்து வரும் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் ஒரு இடம் பின்தள்ளப்பட்டு 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 123, 73 என ஓட்டங்களைக் குவித்த புஜாரா, 81புள்ளிகளை திரட்டி இரண்டு இடங்கள் முன்னேறி 846 புள்ளிகளுடன் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட், 807 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திற்கும், பந்தைச் சேதப்படுத்திய சர்ச்சையில் சிக்கி தடையை அனுபவித்து வரும் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் துணைத்தலைவரான டேவிட் வோர்னர்795புள்ளிகளுடன் ஆறாவது இடத்திற்கும் பின்தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் திமுத் கருணாரத்ன 753 புள்ளிகளுடன் ஏழாவது இடத்திலும், தென்னா



பிரிக்காவின் டீன் எல்கர் 724 புள்ளிகளுடன் எட்டாவது இடத் திலும் உள்ளனர்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில், 126 ஓட்டங்கள் குவித்த நியூசிலாந்து வீரர் ஹென்றி நிகோல்ஸ் தனது வாழ்க்கையில் முதல்முறையாக 17ஆவது இடத்தில் இருந்து, 709 புள்ளிகளுடன் 9ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். பாகிஸ்தானின்அசார்அலி, 708புள்ளிகளுடன் பத்தாவது இடத்தில் உள்ளார். (ஐ)



# பேர்த் டெஸ்ட் இன்று ஆரம்பம்

இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி தற்போது அனைவரினதும் எதிர்பார்ப்பை தூண்டியுள்ளது.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டி, இன்று உலகின் அதிவேக ஆடுகளம் கொண்ட பேர்த் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் இரு அணிகளும் இப்போட்டிக்காக தீவிர பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான 13பேர் கொண்ட இந்தியா அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் உபாதை காரணமாக சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் மற்றும் அதிரடி துடுப்பாட்ட வீரரான ரோஹித் சர்மா ஆகியோர் அணியிலிருந்து விலகியுள்ளனர்.

இதில் அஸ்வினுக்கு பதிலாக ரவீந்திர ஜடேஜாவும், ரோஹித் சர்மாவுக்கு பதிலாக ஹனுமா விஹாரியும் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணியில், முரளி விஜய், கே.எல். ராகுல், புஜாரா, அஜிங்கியா ரஹானே, ஹனுமா விஹாரி, ரிப் பந்த், ரவிந்திர ஜடேஜா, இசாந் சர்மா, மொஹமட் மி, பும்ரா, புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதவ் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இப்போட்டியை பொறுத்தவரை வேகப் பந்து வீச்சாளர்களே அதிகம் ஆதிக்கம் செலுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு, அடிலெய்டில் நடைபெற்று முடிந்த முதல் டெஸ்ட் போட்டியில், ஆஸ்ரேலியாவின் 20 விக்கெட்டுகளில் 14 விக்கெட்டுகளை இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் வீழ்த்தியிருந்தமை நினைவுக் கூரத்தக்கது.

இதுகுறித்து இந்திய அணியின் பந்து வீச்சுப் பயிற்சியாளர் பரத் அருண் கூறுகையில் -

அடிலெய்ட் போட்டியில் மட்டுமல்ல, அதற்கு முன்பாக நடந்த தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மண்ணிலும் நமது வேகப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாகச் செயல்பட்டனர். இந்திய கிரிக்கெட் வரலாற்றில் சிறந்த வேகப் பந்து வீச்சு கூட்டணியில் இதுவும் ஒன்றாகும். வேகப்பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை நன்றாகச் செய்து வருவது மகிழ்ச்சி அளிக்கிறது. ஓரிருவர் மட்டுமல்ல, எல்லா பந்து வீச்சளார்களும் அசத்துகிறார்கள்.

வேகப்பந்து வீச்சாளர்கள் அணியில் மிகவும் மதிப்பு மிக்கவர்கள். அதனால் அவர்களை கவனமாக கையாள வேண்டும். அதாவது பந்தய குதிரையை பராமரிப்பது போல் இவர்களையும் எந்தவித காயத்துக்கும், பணிச்சுமைக்கும் இடம் கொடுக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கடந்த தொடர்களில், தொடர்ந்து சீராக பந்து வீசுவதில் குறைபாடு இருந்தது. அதை சரி செய்வதற்கு உண்மையிலேயே கடினமாக உழைத்திருக்கிறோம். ஒவ்வொருவரும் தங்களது திட்டம் என்ன, அதை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பதை வகுத்து அதற்கு ஏற்ப வலை பயிற்சி மேற்கொள்கிறார்கள்.

பேர்த் போன்ற ஆடுகளத்தில் பந்து வீச்சளார்கள் உற்சாகமாக பந்து வீசுவார்கள். இந்த ஆடுகளத்தை உன்னிப்பாக பார்க்கவில்லை. ஆனாலும் எத்தகைய ஆடுகளத் தன்மை, சீதோஷ்ண நிலை காணப்பட்டாலும் அதற்கு ஏற்ப எங்களை தயார்படுத்திக் கொள்வோம்.

வயது அதிகரிக்க, அதிகரிக்க சுழற்பந்து வீச்சாளர்கள் நன்கு பக்குவப்படுகிறார்கள். அடிலெய்ட் டெஸ்டில் அஸ்வின் உண்மையிலேயே அபாரமாக பந்து வீசினார். கிட்டத்தட்ட 90 ஓவர்கள் பந்து வீசி 147 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுகளை கைப்பற்றி எதிரணியை கட்டுப்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தார். இதற்கு மேல் அவரிடம் இருந்து எதுவும் எதிர்பார்க்க முடியாது. அஸ்வின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒரு பந்துவீச்சாளர். களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்கு தெரியும். அது தான் நமக்கு அனுகூலமாகும் என கூறினார்.

ஆஸ்திரேலியா அணியை பொறுத்த வரை பெர்த் டெஸ்ட் மாற்றங்கள் எதுவும் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. காரணம்கடந்த போட்டியில் அந்த அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பெரிதும் சோபிக்காமையே அணியின் தோல்விக்கு மிக முக்கியமாக காரணமாக அமைந்திருந்தது.

ஆகையால் ஆஸ்திரேலியா அணியில், துடுப்பாட்ட வீரர்கள் வரிசையில் மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# மீண்டும் ஐ.பி.எல்லில் லசித் மலிங்க, மத்தியூஸ்




2 கோடி ரூபாவை அடிப்படையாகக் கொண்ட 9 வீரர்கள் பட்டியலில் லசித் மலிங்க, அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோரின் பெயர் இடம்பெற்றுள்ளன.

2019 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடருக்கான எலம் இடமபெறவுள்ளது. இந்நிலையில் நேற்று ஏலத்துக்கான அடிப்படை விலை நிர்ணயப் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 2 கோடி ரூபா அடிப்படைப் பட்டியலில், மெக்கலம், கிறிஸ் வோக்ஸ், லசித் மலிங்க, கொலின் இங்கிராம், ஷன் மார்ஷ், கொரி அண்டர்சன், சாம் குர்ரான், அஞ்சலோ மத்தியூஸ், டி'ஆர்சி ஷோர்ட் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 1.5 கோடி ரூபா அடிப்படையாகக் கொண்ட வீரர்கள் பட்டியலில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெய்தேவ் உனட்கட் மட்டுமே இடம்பெற்றுள்ளார்.

அத்தோடு 1 கோடி ரூபா அடிப்படையாகக் கொண்ட வீரர்கள் பட்டியலில் வெளிநாட்டு வீரர்கள் 19 பேருடன் யுவராஜ் சிங், அக்சர் படேல், சஹா, மொஹமட் மி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அத்தோடு இலங்கை அணியின் ஆரம்ப அதிரடிதுடுப்பாட்ட வீரர் குசல்பெரேரா ரூ. 75 இலட்சமும், திசர பெரேரா மற்றும் தசுன் சானக, ஜீவன் மெண்டிஸ் ஆகியோருக்கு ரூ. 50 இலட்சமும் என்ற அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ஐ)

**தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் நினைவு தினம் இன்று.**

# ஈழத் தமிழர்களின் இராஜதந்திரியான

# ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கம்



தேசத்தின்குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் மறைவு தமிழீழ மக்களின் விடுதலைப்போராட்ட பாதையில் இன்றும் நிரப்பமுடியாத இடமாக காணப்படுகின்றது, தமிழீழ தேசியத்தலைவர் அவர்களால் ஆழமாக நேசித்த ஒரு விடுதலைச் சிந்தனையாளனாக அன்ரன் பாலசிங்கம் அவர்கள் காணப்பட்டார். தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் தொடக் காலத்தில் இருந்து செயற்பட்ட பாலா அண்ணா விடுதலை இயக்கத்தின் சாணக்கியராக காணப்பட்டார்.



தமிழீழ தேசியத் தலைவர் அவர்களுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் உலக போராட்ட வரலாறுகளை எடுத்துக் கூறி பல்வேறு நாடுகளின் அரசியலாளர்களின் தொடர்புகளை ஏற்படுத்தி அதனுடாக விடுதலைக்கான உழைப்பினை மேற்கொண்டதில் தேசத்தின்குரல் முதன்மையானவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது துணைவியினையும் இணைத்துக் கொண்ட ஒரு மூத்தஅரசியல் போரளியாக,ஒரு மதியுரைஞராக, தத்துவ ஆசிரியராக, தமிழீழ தேசியத்தலைவர் அவர்களுக்கு அருகில் இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்துள்ளார்.

பரந்து வாழும் உலகத்தில் தமிழ் மக்கள் பெருமை கொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் முடிவில்லா சாதனை புரிந்து தமிழ் மக்களின் சுதந்திர போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பெரும் போராட்டப் பணிக்காக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், ‘தேசத்தின் குரல்’ என்ற மாபெரும் மதிப்பினை அவருக்கு வழங்கி அஞ்சலித்தார்.

தாயகத்தில் போர் உக்கிரம் பெற்ற காலகட்டப் பகுதிகளில் தாயகத்தில் இருந்து கொண்டு அரசியல் செயற்பாடுகளை நகர்த்த முடியாத சூழலிலும் உடல் நலத்தினைக் கருத்தில் கொண்டும் கடற்புலிகளின் சிறப்பு பாதுகாப்புடன் கடல் வழியாக வெளியேறிச் சென்று பன்னாடுகளுக்கும் தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகளை எடுத்து கூறினார்.

2002ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசுடன் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டிற்கு முதன்மை வகித்தார். ஸ்ரீலங்கா அரசின் பல மறை முக எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், விடுதலைப் பற்றுக் கொண்டவராக அன்று இரணைமடு குளத்தில் விமானத்தில் வந்திறங்கி தனது அரசியல் பலத்தை இயக்கத்துக்கு வழங்கினார்.

அதனை தொடர்ந்து தாய்லாந்து தொடக்கம் ஜெனீவா வரையான பலசுற்று பேச்சுவார்தைகளில் பங்கொடுத்து தமிழ் மக்களின் அரசியல் வேட்கையினை உலகிற்கு எடுத்துக்கூறினார்.

ஸ்ரீலங்காஅரசாங்கத்துடன் பேச்சுக்களில் ஈடுபட்டு பிரிகேடியர் சு.ப.தமிழ் செல்வன் அவர்களை தனக்கு அடுத்த அரசியல் செயற்பாட்டாளனாக வளர்த்தெடுத்த பெருமை அன்ரன் பாலசிங்கம் அவர்களையே சாரும் .

தமிழீழ மண்ணில் பலகல்விக் கூடங்களையும் அரசியல் நிர்வாக அலகுகளின் அலுவலகங்களையும் திறந்து வைத்துப் பல போராளிகளுக்கு அரசியல் வகுப்புக்களைக் கற்பித்த எங்கள் ஆசானாக என்றும் அவர் தமிழ் மனங்களில் நிறைந்திருப்பார்.

ஸ்ரீலங்கா அரசு போர்நிறுத்த மீறல்களை மேற்கொண்டு தமிழர் தாயகப் பரப்பில் அத்துமீறிய போர் நடவடிக்கையை முன்னெடுத்து 2006 ஆம் ஆண்டு காலகட்டத்தில் உடல் உபாதையால் பாதிப்புற்ற அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 2006ம் ஆண்டு மார்கழி 14ஆம் திகதி தமிழ்மக்களை விட்டுப் பிரிந்து சென்றார்.

தாய்மண்ணின் விடியலில் நாளும் அயாராது உழைத்து தலைவனின் நினைவிலும், தமிழ் மக்களின் நெஞ்சங்களையும் நிறைத்து மாவீரர்களுடன் தமிழீழக் காற்றில் கலந்தார் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம். *


# புதுக்கடை திறப்பு விழா

இறக்குமதியாளர்

**NEW WORLD INTERNATIONAL BUSINESS (PVT) LTD.**




நிகழும் விளம்பி வருடத்தில் 14.12.2018 இன்று காலை 9.30 - 10.40 இற்கு இடைப்பட்ட நேரத்தில் சதய நட்சத்திரமும் ஸப்தமி திதியும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் SUNJEY'S HOLDINGS நிறுவனத்தினரின் (இல. 98, அரசடி வீதி, யாழ்ப்பாணம், யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்) நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக மதிப்புக்குரிய சட்டத்தரணியும் யாழ் மாவட்ட இறைவரி ஆணையாளருமாகிய **பந்துல ஹப்புதந்திரிகே** அவர்களும், சிறப்பு விருந்தினராக சட்டத்தரணியும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமாகிய உயர்திரு. **இ.இளங்கோவன்** அவர்களும் கலந்து கொள்வார்கள். இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நம்பமுடியாத விலையில்
மாபெரும் கழிவு
உங்கள் பணப்பையில் பணத்தை
மேலதிகமாக சேமிக்க முடியும்
**75,000** ரூபா மட்டும்

**DESCRIOTION OF BIKE**

| | |
|---|---|
| Motor Capacity | 800 WATT (0.95HP) |
| Battery | 60 VOLT 20AH |
| Chariging Voltage | AC 220V |
| Max Load | 120 - 140 KG |
| Max Speed | 25 TO 35 KM/H |
| Electricity Charge Cost for One Full Charge | ONE UNIT 0.30 Cents for 1 km |
| One Time Charge | 4 - 6 HRS |

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்
இப்படிக்கு : உரிமையாளர் அருள் ஜெயந்திரன்
SUNJEY'S HOLDINGS
இல.98, அரசடி வீதி, யாழ்ப்பாணம்,
077 386 4077, 077 747 4111

100%
இயந்திர மோட்டார்
பெற்றோல் தேவையில்லை
சூழல் மாசடையாது
எண்ணெய் மாற்றத் தேவையில்லை
புகைப் பரிசோதனை தேவையில்லை.

No.72, Massenger Street, Colombo 12.
Tel : 0112 433 153
Fax : .0112 433 129
E.mail : info@nwilk.com

# 0.30/= சதம்
1 Km இயங்கும் செலவு

# இறுதிப் போரில் சரணடைந்த 500 பேரும் என்ன நடந்தது?

## சர்வதேச அமைப்புகள் கேள்வி

கொழும்பு, டிசெ. 14

இலங்கையின் போர் முடிவுக்கு வந்த 2009 மே 18- 19ஆம் திகதிகளில் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து காணாமல்போனவர்களின் உறவுகளுக்கு இலங்கை இராணுவம் பதிலளிக்கவேண்டும் என இரு சர்வதேசஅரசசார்பற்ற அமைப்புகள் இராணுவ வேண்டுகோள் விடுத்துள்ளன.

படையினரிடம் சரணடைந்தவர்களின் விவரங்கள் குறித்து ஆராய்ந்து வரும் இரு சர்வதேச அமைப்புகளே இந்த அறிக்கையை விடுத்துள்ளன.



சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் ஐ.ரி.ஜே.பி. மனித உரிமை தர ஆய்வுக் குழு (எச்.ஆர்.டி.ஏ.ஜி) ஆகிய அமைப்புகளே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளன.

அதிகளவானவர்கள் காணாமற்போன நாடுகளில் இலங்கையும் ஒன்று எனத் தெரிவித்துள்ள இந்தச் சர்வதேச அமைப்புகள், 500 பேர் ஒரே இடத்தில், ஒரே தருணத்தில் காணாமல் போனமை மிக முக்கியமான விடயம், ஒரே தருணத்தில் பெருமளவானவர்கள் காணமற்போன சந்தர்ப்பம் இது எனவும் தெரிவித்துள்ளன.

2009 இல் சரணடைந்த பின்னர் காணாமல் போனவர்களின் பாரிய எண்ணிக்கை காரணமாக இது குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும் என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் யஸ்மின் சூகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனினும் இதற்குப் பதிலாக ஒருவருடம்கடந்துவிட்டது, இன்னமும் எவரும் 58 ஆவது படைப் பிரிவின் தளபதியாகயிருந்தவரிடம் விசாரணை நடத்தவில்லை. விடுதலைப்புலிகளின் பகுதியிலிருந்து வந்தவர்கள் படையினரிடம் சரணடையும்போது அப்பகுதியில் 58 படைப்பிரிவின் தளபதி காணப்பட்டார் என ஐ.நாவின் தகவல்கள் மற்றும் நேரில் பார்த்த சாட்சியங்கள் மூலம் அறிய முடிந்துள்ளது என யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கு ஜெனரல் தரத்துக்குப் பதவி உயர் வழங்கப்பட்டுள்ளதும் இதன் காரணமாக அவர் இராணுவத்தின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளமையும் காணாமற்போனவர்களின் குடும்பத்தவர்களுக்குச் செய்யும் அவமரியாதை எனவும் அவர் குறிப்பிட்டார்.

குடும்பத்தவர்களுக்குப் பதில் வழங்கப்படவேண்டும், அவர்களுக்கு உண்மையை அறிவதற்கான உரிமையுள்ளது எனவும் அவர் கூறினார்.

யுத்தத்தின் போது காணாமல் போனவர்களின் பெயர் விவரங்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஐ.ரி.ஜே.பி. கடந்த பலவருடங்களாக ஈடுபட்டுள்ளது. தற்போது அதனிடம் 300 பேரின் படங்களும் பெயர்களும் உள்ளன எனவும் தெரிவித்துள்ளது.

சரணடைந்தவேளைகாணாமல்போன 20 பேரின் விவரங்களை 2011 இல் நாங்கள் பெற்றோம். 2014 இல் அது 103 ஆக அதிகரித்தது, இவ்வருட ஆரம்பத்தில் இந்த எண்ணிக்கை 280 ஆக அதிகரித்தது. தற்போது எச்.ஆர். டீ.ஏ.ஜி. அமைப்பு சரணடைந்த பின்னர் காணாமல்போனவர்களின் எண்ணிக்கை 500ற்கும் அதிகம் என கருதுகின்றது என யஸ்மின் சூகா மேலும் கூறினார். (ஐ)

# மைத்திரிபாலவின் செயல் படுகேவலம்

## சாடுகின்றார் தலதா அத்துக்கோரள

கொழும்பு, டிசெ. 14

மத்திய வங்கி பிணைமுறி விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் இதுவரை நிரூபிக்கப்படவில்லை. ஆதாரமற்ற இந்தக் குற்றச்சாட்டுக்களை வைத்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிரட்டி வருகின்றார். இது படுகேவலமானது.

– இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துக்கோரள தெரிவித்தார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நல்லாட்சி அரசைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு திறம்பட முன்நகர்த்திச் சென்றது. மஹிந்த தலைமையிலான ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்கு எதிராக நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால், குற்றவாளிகள் அனைவரையும் தண்டிக்க ஜனாதிபதி மைத்திரியே தடையாக இருந்தார் என்பது உண்மை.



நல்லாட்சி அரசுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டவர்களின் கருத்துக்களைக் கேட்டு மத்திய வங்கி பிணைமுறிமோசடிதொடர்பில் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு மைத்திரி நியமித்தார்.

பிணைமுறி மோசடி விவகாரத்துடன் ரணில் விக்கிரமசிங்க தொடர்புபட்டிருந்தால் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளிவந்தவுடன் அவருக்கு எதிராக மைத்திரி நடவடிக்கை எடுத்திருக் கலாம்.

தனது அரசியல் சதித் திட்டத்தைப் பொய்களைச் சொல்லி நியாயப்படுத்துவதற்காகவே மத்திய வங்கியின் பிணைமுறி மோசடிகள் விவாகரத்தை மைத்திரி இன்று கையிலெடுக்கின்றார்.

ஊழல், மோசடிக்காரர்களுடன் மீண்டும் கைகோர்த்த மைத்திரி, இப்படிப் பொய்களைச் சொல்லுவது அவருக்குத்தான் வெட்கக்கேடு– என்றார். (ஐ)

# மஹிந்த வரக்கூடாது என்பதற்காகவே ரணிலைக் கூட்டமைப்பு ஆதரித்தது

## கூறுகின்றார் சிவமோகன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 14

மஹிந்த ராஜபக்ஷ வேண்டாம் என்பதற்காகவே, ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக கூட்டமைப்பு நம்பிக்கை வாக்கெடுப்பில் வாக்களித்ததாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய கட்சியுடன் எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

மஹிந்தவின் காலத்தில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பு, இராணுவக் கட்டுப்பாடு போன்ற பல பிரச்சினைகளை எதிர்கொண்டோம் எனவும், அந்தப் பிரச்சினைகள் கடந்த மூன்றரை ஆண்டு காலத்தில் இருக்கவில்லை என்றும் அவர் கூறினார். ஆகவே தமக்கு வேண்டாத ஒருவர் அதிகாரத்துக்கு வராமல் இருப்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் வாக்களித்ததாக சிவமோகன் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

# நம்பிக்கைத் தீர்மானத்தை ஒருபோதும் ஏற்கமாட்டோம்

## மஹிந்த அணி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கைத் தீர்மானத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கக் கோரி அவர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் சபையில் நேற்று முன் தினம் புதன்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியால் சமர்ப்பிக்கப்பட்ட இப்பிரேரணைக்கு 117 உறுப்பினர்கள் ஆதரவு வழங்கினர்.



இந்த நம்பிக்கைத் தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான வழக்கு விசாரணையும் இடம்பெற்றுவருகின்றது. இந்நிலையில், நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு புறம்பாகச் சபை அமர்வு இடம்பெற்றுவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாக சபாநாயகர் செயற்படுகின்றார்.

நாடாளுமன்றம் இந்த நாள்களில் கூட்டப்படுவது சட்டவிரோதமாகும். எனவே அங்கு நிறைவேற்றப்படும் எந்தவொரு யோசனையையும் ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

இதேவேளை அரசு இல்லாமல் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதானது பாழடைந்த வீட்டில் பாத்திரங்களை உடைப்பது போன்ற செயலென நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரகொடி இதன்போது தெரிவித்துள்ளார். (ஐ)

# சப்புகஸ்கந்தவில் துப்பாக்கிச் சூடு!

## ஒருவர் உயிரிழப்பு

சப்புகஸ்கந்த, கல்வல சந்தியில் நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 35 வயதுடைய வியாபாரி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் சப்புகஸ்கந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆட்சியமைக்கக் கூட்டமைப்பின் ஆதரவை ஒருபோதுமே நாடோம்

## மஹிந்த தரப்பு அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 14

ஆட்சியமைப்பதற்காக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் தமது தரப்பு ஆதரவு கோராது என்று மஹிந்த–மைத்திரி கூட்டணி அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே கூட்டுஎதிரணி எம்.பியான லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு–

ஐக்கிய தேசியக்கட்சிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையே இரகசிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி 04 ஆம் திகதிக்குள் சமஷ்டித் தீர்வு, போர்க்குற்ற விசாரணை உள்ளிட்ட விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வடக்கு இல்லாமல்போகும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு தெற்கு இல்லாமல்போகும். மேற்படி உடன்படிக்கையின் இறுதிப் பிரதிபலன் இவ்வாறுதான் அமையப்போகின்றது. அதற்கேற்றவாறு எமது அரசியல் வியூகம் அமையும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது சரியென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தால் தேர்தலுக்குத் தயாராவோம். பிழையென தீர்ப்பளித்தால் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க முற்படமாட்டோம். அடுத்த தேர்தலை இலக்கு வைத்து செயற்படுவோம்–என்றார்.

அதேவேளை, இதன்போது கருத்து வெளியிட்ட கெஹலிய ரம்புக்வெல்ல,

இரண்டு ஜனாதிபதிகளால் விரட்டப்பட்ட பிரதருக்கே, நாடாளுமன்றத்தில் நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது' என்று கூறினார். (ஐ)

# கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் இருந்து கிளம்பிய எதிர்ப்பை முறியடித்தார் பிரி. பிரதமர் தெரசா மே

## அவருக்கு எதிரா. நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி

லண்டன்,டிசெ.14

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் விலகுவது தொடர்பான பிரெக்சிட் விவகாரத்தை ஒட்டி பிரிட்டனின் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சிக்குள் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், அதைச் சாட்டாக வைத்து சக எம்.பிக்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடித்துப் பிரதமர் தெரசா மே வெற்றி பெற்றார்.



ஐரோப்பிய யூனியனில் இருந்து விலக பிரிட்டன் நாடாளு மன்றம் எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 2016ஆம் ஆண்டு அங்கு பொது வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகம் பேர் வாக்களித்தனர். இதையடுத்து, ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிந்துவிட்ட பிரிட்டன் தனிநாடாகவே பார்க்கப்படுகிறது.

ஆனால், ஐரோப்பிய யூனியனில் இணைந்துள்ள 27 நாடுகளுடனான நிதிக் கொடுக்கல் – வாங்கல், எதிர்கால பரிவர்த்தனை, விசா மற்றும் குடியுரிமை தொடர்பாக இரு தரப்பினரும் செய்துகொள்ள வேண்டிய எதிர்கால உடன்படிக்கையை பிரிட்டன் பிரதமர் தெரசா மே தயாரித்து வந்தார்.

இந்தச் செயல்திட்ட வரைவு அறிக்கையை ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சியை சேர்ந்த முதன்மை மந்திரிகளும், எதிர்க் கட்சி எம்.பி.க்களும் கடுமையாக எதிர்த்துவந்தனர். இதுதொடர்பாக தனிப்பட்ட முறையிலும் நாடாளு மன்றத்திலும் சூடான விவாதங்கள் நடந்து வந்தன.

அதிருப்தி அடைந்த சில மந்திரிகளும் சொந்தக் கட்சி எம்.பி.க்களும் நாடாளுமன்றத்தில் தெரசா மேவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதற்கு திட்டமிட்டு, இதற்காக ஆதரவு திரட்டி வருகின்றனர். மேலும், அவரைக் கட்சி தலைவர் பதவியிலிருந்து இறக்குவதற்காகவும், இரகசியமாகக் கையெழுத்து வேட்டை நடத்தி வந்தனர்.

அதன்படி தெரசா மேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர 48 எம்.பி.க்களின் கையொப்பமிட்ட கடிதம் கொன்சர்வேட்டிவ் கட்சியின் செயற்குழுத் தலைவர் கிரஹம் பிராடிக்கு அனுப்பப்பட்டது.

இதையடுத்து தெரசா மேவுக்கு எதிராக நேற்று முன்தினம் இரவு கட்சியில் நம்பிக்கையில்லா பிரேரனை முன்மொழியப்பட்டது. பின்னர் அதன் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், மொத்தம் உள்ள 317 எம்.பிக்களில் 200 பேர் தெரசா மேவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால் தெரசா மே வெற்றி பெற்றார். இதன்மூலம் அவர் கட்சி தலைவர் பதவியில் நீடிப்பார்.

பிரதமர்மீது கட்சியின் நாடாளு மன்றக் குழ நம்பிக்கை வைத்திருப்பதையே இந்த வாக்கெடுப்பின் முடிவு காட்டுவதாக கொன்சர்வேட்டிவ் கட்சியின் செயற்குழு தலைவர் கிரஹம் பிராடி தெரிவித்தார்.

NEW SCIENCE WORLD
VICTORY MUST

NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna.
Telephone:- 077 336 4055 / 021 221 6690
G.C.E. (A/L) 2021 SCIENCE STREAM

தமிழ்மொழி மூலம்
பௌதிகவியல்:
திரு.R.குமரன் திரு.R.குகன்
இரசாயனவியல்:
திரு.டயஸ் திரு.K.T.சிவகுமார்
உயிரியல்:
திரு.N.T.கஜேந்திரன்
இணை. கணிதம்:
திரு.S.S.செந்தில்ராஜ்

ENGLISH MEDIUM
Physics:
Mr.R. Kumaran
Chemistry:
Mr.Dias
Biology:
Mr.N.T.Gajenthiran
Com. Maths:
Mr.S.Krishna

ஆரம்பம்: இன்று (14.12.2018) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி
அனுமதிகளை காலை 6.30 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## பதவி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. மஹிந்தராஜபக்ஷஉள்ளிட்ட பொது ஜன பெரமுன உறுப்பினர்களும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு –

நீதிமன்ற தீர்ப்பை ஏற்கவேண்டும். அதை நாம் மதிக்கின்றோம். மக்கள் பக்கம் நின்றே ஜனாதிபதி முடிவெடுத்திருந்தார். எனினும், உயர்நீதிமன்றத் தீர்ப்பால் தேர்தலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஆட்சிநடத்த முடியாது என்று ஜனாதிபதி அறிவித்தார். இதனால் சிற்சில பிரச்சினைகள் எழக்கூடும். இருந்தாலும் நாடு தொடர்பில் சிந்தித்துத்தான் எடுத்த முடிவை மாற்றப்போவதில்லை, ஜனாதிபதி பதவி பறிபோனால் கூடபரவாயில்லை. சவால்களுக்கு முகங்கொடுப்பேன் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாளை (இன்று) மற்றுமொரு நீதிமன்ற தீர்ப்பு வெளியாகவுள்ளது. அதன் பின்னரே எமது தரப்பிலிருந்து அரசியல் முடிவெடுக்கப்படும். என்றார். (ஐ)

## ஐ.தே.க...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியான கையோடு நீதிமன்றத்துக்கு வெளியேவந்து வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களும் நீதிமன்ற வளாகத்தில் – பட்டாசு கொளுத்தி, ஜனநாயகம் வென்று விட்டதாகக் கோஷம் எழுப்பினர்.

அஜித் பி பெரேரா, ராஜித சேனாரத்ன, முஜிபூர் ரஹ்மான் ஆகியோர் ஆதரவாளர்களுக்கு மத்தியில்வந்து வெற்றிக் கோஷம் எழுப்பினர். அதேபோல், மனுதாரர்கள் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதேவேளை, நீதிமன்றம் வந்திருந்த மஹிந்த அணியினர் ஏமாற்றத்துடன் வெளியேறியமையைக் காண முடிந்தது.

நான்கரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது சட்டவிரோதம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதையடுத்து – நாடு முழுவதும் ஐ.தே.க. ஆதரவாளர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## உயர்நீதிமன்றத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதித்து செயற்படுவர் எனத்தான் நம்புகிறார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வெளியான பின்னர், ரணிலினால் வெளியிடப்பட்டுள்ள டுவிட்டர் பதிவிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் இறையாண்மை மதிக்கப்படவேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆட்சி அமைப்பதற்குரிய அழைப்பை ஜனாதிபதி விடுக்கவேண்டும். பிரதமராக ரணில் விக்கிரமசிங்கவை நியமிக்கவேண்டும் என்று ஐ.தே.கவின் உபதலைவரான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர், நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ரவி கருணாநாயக்க மேற்படி கோரிக்கையை விடுத்தார். (ஐ)

## ஜனாதிபதிக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பு வழங்கியுள்ளதால் அவருக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைப்பிரேரணையைக்கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நேற்றிரவு இந்த அறிவிப்பை விடுத்தார்.

நாடாளுமன்றைக் கலைத்து ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புஅரசமைப்புக்குமுரணானது – சட்ட விரோதமானது என உயர்நீதிமன்றம் நேற்று மாலை தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாக வைத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நாடாளுமன்றில் குற்றவியல் விசாரணைப் பிரேரணையைக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளதாக ஜே.வி.பி. கூறியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனபலமுறைஅரசமைப்பை மீறியிருக்கிறார். தொடர்ந்தும் அத்தகைய மீறல்களில் அவர் ஈடுபட்டு வருகிறார். அவருக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைப் பிரேரணை நாடாளுமன்றில் முன்வைக்கப்படும். அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் ஜனாதிபதிப் பதவியை மைத்திரிபால சிறிசேன இழப்பதுடன், அவரது குடியுரிமையும் பறிக்கப்படும் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். (ஐ)

## வைத்தியசாலை...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான இரா.சம்பந்தன், நாடாளுமன்றக் கலைப்புச் சட்டவிரோதமானது என உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை மனதார வரவேற்றுள்ளார்.

இரா.சம்பந்தன் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சர்வாதிகார நடவடிக்கைக்கு உயர்நீதிமன்றம் தக்க பாடம் புகட்டும் என நான் ஏற்கனவே அறிவித்திருந்தேன். அதற்கமைய தீர்ப்பு இன்று (நேற்று) வெளிவந்துள்ளது. இந்தத் தீர்ப்பை மனதார வரவேற்கின்றேன். நாட்டில் ஜனநாயகத்தை நிலைபெறச் செய்ய இந்தத் தீர்ப்பு பெரிதும் உதவும். எனவே, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஜனாதிபதி மதிப்பளிக்க வேண்டும். தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை அவர் உடன் நிறுத்த வேண்டும். அரசமைப்பின் பிரகாரம் நடவடிக்கைளை அவர் முன்னெடுக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டுள்ள அணியினிடம் அரசாட்சிப் பொறுப்பை அவர் வழங்கவேண்டும் – என்றார். (ஐ)

## பொதுத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதித்துள்ளோம். நாடாளுமன்றத் தேர்தலுக்கான அழைப்பைத் தொடர்ந்து நாங்கள் வலியுறுத்துவோம். பொதுத் தேர்தல் இல்லாமல் நாட்டு மக்களுக்கு உண்மையான நீதி இல்லை.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டரில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்றைக் கலைத்து ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புஅரசமைப்புக்குமுரணானது என உயர்நீதிமன்றின் 7 நீதியரசர்கள் அமர்வு ஏகமனதாகத் தீர்ப்பளித்த நிலையில் நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடாளுமன்றக்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வழக்கு உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் நேற்று மாலை 7 நீதியரசர்களைக் கொண்ட குழாம் ஏகமனதாக இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

இலங்கை ஜனாதிபதி ஒருவரின் அரசமைப்பு மீறலுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய முதலாவது தீர்ப்பாகவும் இது அமைந்தது.

கடந்த நவம்பர் மாதம் 9ஆம் திகதி, நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பைச் சவாலுக்கு உட்படுத்தி, 13 மனுதாரர்கள், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் இம்மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரையான நான்கு நாள்கள் உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் நளின் பெரேரா தலைமையிலான 7 நீதியரசர்களைக் கொண்ட குழாம் முன்னிலையில் விசாரிக்கப்பட்டன.

இந்த மனுக்கள் தொடர்பான தீர்ப்பு நேற்று மாலை 4 மணிக்கு அறிவிக்கப்படும் என்று உயர்நீதிமன்றப் பதிவாளர் அறிவித்திருந்தார்.

எனினும், விசாரணை அறைக்கு நீதியரசர்கள் குறித்த நேரத்துக்கு வரவில்லை. 7 நீதியரசர்களும் மாலை 4.50 மணியளவிலேயே 502 ஆம் இலக்க நீதிமன்ற அறைக்கு வந்தனர்.

அதன் பின்னர் அவர்கள் தீர்ப்பை வாசித்தனர். இந்தத் தீர்ப்பிலேயே, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் உத்தரவு சட்டவிரோதமானது – தவறானது என்று ஏகமனமாக நீதியரசர்கள் தீர்ப்பளித்தனர்.

நான்கரை ஆண்டுகளுக்கு முன்னதாக, நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்று ஏழு நீதியரசர்களும் தமது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவேண்டுமாயின், நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியே அதனைச் செய்ய முடியும் என்றும் நீதியரசர்கள் தீர்ப்பில் கூறினர்.

வரலாற்றுத் தீர்ப்பைப் பிரதம நீதியரசர் நளின் ஜெயலத் பெரேரா தலைமையில் நீதியரசர்கள் பிரசன்ன ஜெயவர்த்தன, பிரியந்த ஜெயவர்த்தன, புவனேக அலுவிகார, சிசிர டி ஆப்ரூவ், விஜித் மல்கொட மற்றும் முருது பெர்னாண்டோ ஆகிய 7 பேர் கொண்ட அமர்வு வழங்கியது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும், உயர்நீதிமன்றத்துக்கு வெளியே ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் வெடி கொளுத்திப் பெரும் ஆரவாரக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

அதேவேளை, உயர்நீதிமன்ற வளாகத்தைச் சுற்றிப் பெருமளவு பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. (ஐ)

## சட்டம்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியத்துவமிக்க உயர்நீதிமன்றத் தீர்ப்பு நிரூபித்துள்ளதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அரசமைப்புக்கு முரணான வகையில் ஜனாதிபதி செயற்படத் தொடங்கியதிலிருந்து, அதுபிழையெனநிரூபிக்கும்வரை நாங்கள் நீதிமன்றத்தின் ஊடாக மேற்கொண்ட முயற்சிகளுக்கு இன்று உரிய பலன் கிடைத்துள்ளது. சட்டம் தனது கடமையை மிகச் சரியாக செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த நவம்பர். 12ஆம் திகதி உயர்நீதிமன்றம் நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிராக வழங்கிய இடைக்காலத் தடையுத்தரவு மூலம் ஜனநாயகத்தை விரும்பும் மக்களுக்கு ஓரளவு நிவாரணமும் நிம்மதியும் கிடைத்தது. அதன் தொடர்ச்சியாக இன்றைய சரித்திரம் வாய்ந்த தீர்ப்பானது ஜனநாயகத்துக்கான பூரண வெற்றியென்றே நாம் கருதுகின்றோம். நீதிமன்றத்தில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ஜனநாயக வெற்றிக்காகவும் நீதிக்காவும் போராடியது. அந்த வகையில் அரசமைப்புச் சட்டமானது நீதிமன்றத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கும் பாதுகாப்பு கிடைத்துள்ளதாகவே நாம் உறுதியாக நம்புகின்றோம்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு மதிப்பளித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இனியும் காலம் தாழ்த்தாது ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவியைவழங்கி, ஒக்ரோபர் 26ஆம் திகதிக்கு முன்னரான நிலையை உருவாக்கி தற்போதைய அரசியல் நெருக்கடிக்கும் உடனடியாகத் தீர்வை காண வேண்டும்.

ஜனநாயகத்தை வெற்றி கொள்வதற்கான இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைத்தவர்களுக்கும், எமது வேண்டுகோளை ஏற்று இறை பிரார்த்தனையில் ஈடுபட்டவர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றேன் – என்றார். (ஐ)

## ரணிலுடன்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலுடன் ஒப்பந்தம் எதிலுமே கைச்சாத்திடவில்லை.

– இவ்வாறு நேற்று மாலை அறிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் எனக் கூறி முற்றுமுழுதாகச் சிங்களத்தில் அமைந்த ஆவணம் ஒன்று நேற்று சமூகவலைத்தளங்களிலும் இணையத்தளங்களிலும் வெளியிடப்பட்டிருந்தது. அதில் கூட்டமைப்பின் இரா. சம்பந்தன், ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் கையொப்பங்களும் இருந்தன. இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அரசியல் கைதிகள் விடுதலை, போர்க்குற்ற விசாரணை, படையினர் வெளியேற்றம், வடக்கு – கிழக்கு இணைப்பு, ஜெனிவாத் தீர்மானம் நடைமுறைப்படுத்தல் உட்படப் பல விடயங்கள் அந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே நாடாளுமன்றில் ரணில் மீதான நம்பிக்கைப் பிரேரணைக்கு கூட்டமைப்பு ஆதரவு அளித்தது என்றும் தகவல்கள் பரப்பப்பட்டன.

இது தொடர்பில் தெளிவுபடுத்தி கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று மாலை அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி/ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகிய நானும் ஓர் ஒப்பந்தம் செய்துள்ளோம் என்று ஆவணம் ஒன்று வெளிவந்துள்ளதாக அறிய முடிகின்றது. நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரோடு எவ்வித ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவில்லை. இந்த ஆவணம் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாக வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் – என்றுள்ளது. (ஐ)

## குழப்பங்களுக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் கொழும்பு வந்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு, மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான, பதில் பிரதி உதவிச் செயலர் டேவிட் ரன்ஸ் என்ற மூத்த இராஜதந்திரியே கொழும்பு வந்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதமே இவர், இலங்கை உள்ளிட்ட தெற்கு, மத்திய ஆசிய நாடுகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பான பணியகத்தில் முக்கியமான இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருப்பது இதுவே முதல்முறையாகும்.

இலங்கையில் முறையான அரசு ஒன்று பதவியில் இல்லாத – அரசியல் குழப்பங்கள் தீவிரமடைந்துள்ள – சூழலில் கொழும்பு வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் பிரதி உதவிச் செயலர் டேவிட் ரன்ஸ், நேற்று முன்தினம் சிந்தனையாளர் குழாமைச் சேர்ந்த வல்லுநர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இந்தோ – பசுபிக் மற்றும் அமெரிக்காவின் இந்தோ – பசுபிக் மூலோபாயத்தில், இலங்கையின் பங்கு, குறித்து அவர் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தியிருந்தார்.

அத்துடன், எந்தவொரு நாட்டையும் விலக்கி வைக்காமல், பிராந்தியத்தில் சுதந்திரம், வெளிப்படை மற்றும் செழிப்பு ஆகியவற்றை முன்னெடுப்பதே, தமது மூலோபாயம் என்றும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். (ஐ)

## ஜனநாயகத்துக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் செயற்படுகின்றது என்பது மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தியுள்ளது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றம் நேற்று மாலை தீர்ப்பு வழங்கிய பின்னர், நீதிமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்றைய தீர்ப்பானது இலங்கையின் நீதித்துறை வரலாற்றிலேயே உச்சகட்டத்தை அடைந்த தீர்ப்பு. மிகவும் முக்கியமான தீர்ப்பு. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் செயலை சவாலுக்குட்படுத்தி அது தவறானது – சட்ட வலுவற்றது – சட்டவிரோதமானது – அரசமைப்புக்கு முரணானது – என்று வழங்கப்பட்ட தீர்ப்பாகும். சட்டத்துக்கு எல்லோரும் சமன் என்றும், சட்டத்தை மீறி ஜனாதிபதியால் கூட எதனையும் செய்ய முடியாது என்பதையும் இன்றைய தீர்ப்பானது எடுத்துக் காட்டுகின்றது.

மக்கள் எதிர்பார்த்த தீர்ப்பே கிடைக்கப் பெற்றுள்ளது. எதிர்வரும் காலத்திலாவது ஜனாதிபதி அரசமைப்புக்கு மதிப்பளித்து சட்டத்தை உணர்ந்து செயற்பட வேண்டும் – என்றார்.

# யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

கந்தரோடை சுன்னாகம்



## அமரர்களான

லயன்

## மகாதேவா – பூமாதேவி

**ஆகியோரின்**
**ஓராண்டு நிறைவும்**
**ஞாபகார்த்த கட்டடத்**
**திறப்பு விழாவும்**

**காலம்:** இன்று 14.12.2018 வெள்ளிக்கிழமை, காலை 8 மணி

**இடம்:** கல்லூரி வளாகம்

**தலைமை:** ஸ்கந்தவரோதயன் லயன் மு.செல்வஸ்தான்
(கல்லூரி முதல்வர்)

**பிரதம விருந்தினர்**
ஸ்கந்தவரோதயன் கௌரவ த.சித்தார்த்தன் (நா.உ)

**சிறப்பு விருந்தினர்**
லயன் தேவா பீற்றர் (மாவட்ட ஆளுநர்-லயன்ஸ் கழகம்)

**ஆசியுரை**
கலாநிதி ஆறு. திருமுருகன்
(ஓய்வு நிலை அதிபர் – ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**மண்டபத் திறப்பு**
அமரர்களின் புதல்வர்களான

ம.பிருந்தாபன் (லண்டன்)
லயன் ம. பிரிதிவிராஜா (லண்டன்)

**ஞாபகார்த்த நூல் வெளியீடு**
கௌரவ த.சித்தார்த்தன்

அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கந்தரோடை** **லயன் மகாதேவா குடும்பம்**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.